பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 16 வெள்ளிக்கிழமை 29.04.2022 கதிர் 175

**இது ரகசியம் அல்ல!**

*“ஒருபுறம் வேடன்*
*மறுபுறம் நாகம்*
*இரண்டுக்கும் நடுவே*
*அழகிய கலைமான்”*

– ‘மயங்குகிறாள் ஒரு மாது’ படத்தில் வந்த பாடலின் ஓரடி இது. இன்றைய சூழலில் ஜனாதிபதி கோட்டாபய ☞2

## பின் வாங்கினார் ஜனாதிபதி; இடைக்கால அரசும் ‘அவுட்’!

# தமக்குச் சகோதர பாசம்தான் முக்கியம் என்கிறார் கோட்டா



## பிரதமர் மஹிந்தவைப் பதவி விலகுமாறு தாம் கோரவேயில்லை எனவும் அறிவிப்பு

கொழும்பு, எப்ரல் 29

தமது சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அப்பதவியிலிருந்து விலக்கிவிட்டு புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும் தனது உத்தேச திட்டத்திலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடைசி நேரத்தில் பின் வாங்கி விட்டார் எனத் தெரிகிறது. ☞12

## இந்திய முதலீட்டாளர்களின் மூலம் மண்டைதீவில் கடல்பாசி செய்கை

### நேற்று கொழும்பில் அமைச்சர் டக்ளஸுடன் பேச்சு



யாழ்ப்பாணம் மண்டைதீவுப்பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் கடல்பாசி செய்கையை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று இந்திய தனியார் ☞2

## ரம்புக்கனையில் சுடுவதற்கு உத்தரவிட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கைது!

### 3 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கைது

கொழும்பு,ஏப்.29

அண்மையில் ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குழுவின் கட்டளையிடும் அதிகாரியாக செயற்பட்ட கேகாலை முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. பி.கீர்த்திரத்ன குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதேபோல், இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் ☞2

## யாழ். பல்கலைக்கழகத்தில் போராட்டம் மும்முனையில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.29

அரசுக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று மூன்று பிரிவுகளாகப் போராட்டங்கள் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் என்பன காலையில் 11மணியளவில் ஒரே நேரம் போராட்டத்தில் ஈடுபட்ட போதும் இரு திசைகளில் நின்று தனித்தனியே போராடினர். இதேநேரம் மாலையில் மருத்துவ பீட மாணவர்கள் மருத்துவ பீடம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் ☞2

## பொருளாதார நெருக்கடிக்கு ஒரு மாத காலத்திற்குள் தீர்வு

### நிதி, நீதி அமைச்சர் அலி சப்ரி உறுதி தெரிவிப்பு

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு மாதத்திற்குள் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நிதி மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றவளாகத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மின்சாரம், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ☞2



## பரீட்சைகள் பற்றிய அறிவிப்பு

2022 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர் தரம் மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான திகதிகளை பரீட்சைகள் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மே 23 முதல் ஜூன் முதலாம் திகதி வரை ஒன்பது நாள்களுக்கு நடைபெறும். உயர்தரப் பரீட்சை ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 6ஆம் ☞2

## பளை விபத்தில் ஒருவர் பலி



கிளிநொச்சி -பளைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற் றுப்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏ9 வீதி ☞2

## ஈ.பி.டி.பியின் வேலணை சபையில் அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.29

ஜனாதிபதியும் அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் என ஈ.பி.டி.பியின் ஆட்சியில் உள்ள வேலணை பிரதேச சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் என கோரிக்கை ☞12

## ஜனாதிபதியுடன் மட்டுமே பேசுவது 11 கட்சிகள் நேற்றுகூடித் தீர்மானம்

### முடிவு ஜனாதிபதிக்கும் அறிவிப்பு

மொட்டுக் கட்சிக் கூட்டில் அங்கம் வகித்து, பின்னர் தற்போது சுயாதீனமாக இயங்கும் 11 சிறிய கட்சிகளும் ஜனாதிபதியுடன் இடம்பெறவுள்ள இன்றைய கலந்துரையாடலில் நிபந்தனைகளுடன் பங்கேற்பது என நேற்றுத் தீர்மானித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதமரோ அல்லது ☞2

## பிரதி சபாநாயகர் பதவிக்கு மும்முனைப் போட்டி

நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பதவிக்கு மும்முனைப் போட்டி நிலவக்கூடும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பிரதி சபாநாயகர் பதவியை வகித்தரஞ்சித்சியம்பலாப்பிட்டிய கடந்த 22 ஆம் திகதியுடன் இராஜிநாமா செய்துவிட்டார்.

இது தொடர்பான கடிதம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் 4ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது முதல் தேர்வாக, பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற வேண்டும்.

ஒருவரின் பெயர் ☞12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) ராஜபக்ஷவின் நிலையும் இத்தகையதுதான்.

ஒருபுறம் எழுச்சியோடு கிளர்ந்து நிற்கும் மக்களின் போராட்டம். அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே அந்த மக்கள் எழுச்சியைக் கண்டு ராஜபக்ஷக்கள் தரப்பை விட்டு விலகி ஓடும் துர்ப்பாக்கிய நிலைமை. அத்தோடு அந்தத் தரப்புக்கு - மக்களுக்கு - ஆதரவாக மகாநாயக்க தேரர்கள் ஒன்றுபட்டு எடுத்திருக்கும் நிலைப்பாடு. நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்கு தங்களின் வழிகாட்டலுக்கு இணங்கித் தீர்வு காண ஒத்துழைக்காவிட்டால் சங்கப் பிரகடனத்தைச் செய்வோம் என்று மகாநாயக்கர் கொடுத்திருக்கும் மிரட்டல்.

மறுபக்கத்தில் தமையனார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஆளும் கூட்டணியில் அவருக்கு ஆதரவாக நிலைப்பாடு எடுத்திருக்கும் எம்பிக்களும்.

இந்த இரண்டுக்கும் நடுவில் சிக்குண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திணறுகிறார் கோட்டாபய ராஜபக்ஷ.

இப்போதைய நெருக்கடியை பிரதமர் மஹிந்தவின் மீது ஒருவாறு சுமத்தி, அவருக்குப் பதவியில் இருந்து கல்தா கொடுப்பதன் மூலம், தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று முதலில் திட்டமிட்டார் கோட்டாபய.

இடைக்கால அரசு ஒன்றை அமையுங்கள் என்ற மகாநாயக்கர்களின் கோரிக்கையையும் இதன்மூலம் சமாளித்து, விடயத்தை ஒப்பேற்ற அவர் தீர்மானித்தார். மகாநாயக்கர்களின் இஷ்டப்படி இடைக்கால அரசு ஒன்றை நிறுவினால், அதன்மூலம் இப்போதைய நெருக்கடிகளை எதிர் கொள்வதற்கான கால அவகாசத்தைப் பெறலாம்.

பிறகும் அதே மகாநாயக்கர்களை காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தும் இளைஞர்களோடு பேச்சு நடத்தச் செய்து, அவர்களைச் சமாளிக்கவும் காய் நகர்த்தலாம் என்று எதிர்பார்த்தார்.

ஆனால் தனது மொட்டுக் கட்சிக்குள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருந்த - இருக்கும் - ஆதரவு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் திட்டத்துக்கு ஆப்பு வைத்து விட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ அகற்றுவாரானால் - நேற்று நான் குறிப்பிட்டபடி - எதிரணியில் போய் இருந்து பணியாற்ற முழு தயார் நிலையில்தான் மஹிந்தர் இருந்தார். இருக்கிறார்.

அதுவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பதவியிலிருந்து தூக்கிக் கடாசப்பட்டவர் என்ற முத்திரையோடு, ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டுடன் மஹிந்த ராஜபக்ஷ எதிரணியில் குந்துவாரானால் அந்தச் சீற்றத்தைத் தம்மால் சமாளிக்க முடியாமல் போகும் என்பதை கோட்டாபய ராஜபக்ஷ காலம் பிந்திக் கடைசி நேரத்திலாவது உணர்ந்து கொண்டு விட்டார் போலும். கோட்டாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் எதிரணிக்குச் செல்லும் இலக்கோடு இப்போது நிற்கக் கூடிய எம்பிக்கள் கூட மஹிந்த பக்கமே செல்வார்கள் என்பது திண்ணம்.

ஆட்சித் தலைவருக்கு எதிராக மக்கள் கருத்து நிலைப்பாடு உச்சம் பெற்று வருகையில் அவர் பக்கத்திலிருந்து வெளியே வருவதற்கு ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் விரும்புவர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அத்தகைய தரப்பினர், ஆட்சித் தலைவருக்கு எதிரான நிலைப்பாட்டில் மஹிந்தர் நாடாளுமன்றத்தில் அமர்ந்தால், அவருக்குப் பின்னால் அணி திரள்வதை தங்களது தொகுதி மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை உணர்ந்து கொண்டு இப்படி மஹிந்தருக்கு பின்னால் போக முடிவெடுப்பார்கள்.

இந்த விடயங்களை விளங்கிக் கொண்ட கோட்டாபயவுக்கு, தாம் அமைக்க உத்தேசித்த இடைக்கால அரசு நீண்ட காலம் தாக்குப்பிடிக்காது என்பதும், அதற்காக மஹிந்தரை எதிரணியில் நிறுத்தினால் ஏனைய தரப்பினரின் ஆதரவோடு எதிரணி அரசியல்வாதியாகப் போதிய பெரும்பான்மையைத் திரட்டிக்கொண்டு வந்து அரசு அமைப்பதற்கு உரிமை கோருவார் என்பதும், அத்தகைய உரிமை கோரும் நிலைமை விரைவில் வரும் என்பதும் கோட்டாவுக்கு புரிந்துள்ளது. அதனால் தான் மஹிந்தரோடு பகைப்பதை இப்போது திடீரென கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார் அவர்.

ஆனால் அவரின் இந்த முடிவு நின்று, நிலைத்து, நீடிக்குமா என்பது சந்தேகமே.

மறுபுறத்தில் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் சு.க.வின் தலைவர் மைத்திரி போன்றவர்கள் ஒருபுறமும், மகா நாயக்கர்கள் மறுபுறமும் அணி திரண்டு ஜனாதிபதிக்கு எதிராக இன்று முதலே அழுத்தம் கொடுக்க புறப்பட்டு விடுவார்கள் என்பது திண்ணம். போதாக்குறைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தனது நம்பிக்கையில்லாப் பிரேரணைத் துரும்பை வெற்றிகரமாக நகர்த்த முயலும்.

அப்படி பல முனை இக்கட்டுகள் வரும் போது நிச்சயமாகத் தடுமாறும் கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய முன்னைய முடிவிலிருந்து விரைந்து குத்துக்கரணம் அடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நேற்றுமுன்தினம் இருந்த நிலையில் நேற்று கோட்டாபய இல்லை. இன்று இன்னொரு நிலைப்பாட்டை அவர் எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அரசியல் முன் அனுபவமோ நாடு பற்றிய தீர்க்கதரிசனமான - தெளிவான - பார்வையோ, ஒருதலைவனுக்குரிய - ஓர் அரசியல் தலைவனுக்குரிய - அடிப்படை பண்பியல்புகளோ கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இல்லை. அதனால் அவர் தனது தோல்வியை முத்திரையாகப் பதித்து, அரசியலிலிருந்து ஓரம் கட்டப்படுவது நிச்சயம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தமது பதவிகளை விடாது பற்றி நிற்கும் அவரது போக்கும் வரலாற்றில் மிக மோசமான அரசியல் தலைவராக அவரை அடையாளப்படுத்திச் செல்லும் என்பது நிச்சயம்.

– மின்னல் –

---

## பளை விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) யிலிருந்து மருதங்கேணி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த கப் வாகனத்துடன் கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த உடுத்துறை வடக்கு தாளையடிப் பகுதியைச் சேர்ந்த நாகேந்திரன் ஜெகன் என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

---

## ரம்புக்கனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) 3 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கண்டி குண்டசாலை பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் தொடர்பில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றுப் பிற்பகல் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

அதன் பின்னரே பொலிஸ் அதிகாரிகள் கைதுப் படலம் அங்கேறியது.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய சகல பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கேகாலை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

இது தொடர்பான உத்தரவு நேற்றுப் பொலிஸ் தலைமையகத்திற்கு கிடைக்கப்பெற்றதுடன், பொலிஸ் மா அதிபர் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபருக்கு மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சமிந்த லக்ஷன் கடந்த 19ஆம் திகதி ரம்புக்கனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## ஜனாதிபதியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) அமைச்சரவையின் ஏனைய அங்கத்தவர்களோ இன்றி ஜனாதிபதி தரப்பு மட்டும் பேச்சு வந்தால் - தனிப்பட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டால் - ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவது என 11 கட்சிகளும் நேற்றுத் தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதியால் இன்றைய தினம் கூட்டுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள கலந்துரையாடலில் கலந்துக் கொள்வது தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடு எதிர்நோக்கும் நெருக்கடிக்குத் தீர்வாக சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் கலந்துரையாடுவ தற்கு ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சி தலைவர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார் என்பது தெரிந்ததே.

---

## பரீட்சைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) திகதி நடைபெறவுள்ளது என பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன ஊடகங்களுக்கு கருத்து கூறும் போது தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனைத்துத் தேர்வுத் தாள்களும் மே 21ஆம் திகதிக்குள் அனைத்து மாகாணக் கல்வி ஒருங்கிணைப்பு மற்றும் பிராந்தியக்கூட்டுமையங்களுக்கும் வழங்கப்படும்.

542 ஒருங்கிணைப்பு நிலையங்களின் கீழ் இயங்கும் 3,842 பரீட்சை நிலையங்களில் 4,07,129 பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் 1,10,367 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என மொத்தம் 5,17,496 பரீட்சார்த்திகள் 2022 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

பரீட்சைகளின் போது கடமையாற்றும் கண்காணிப்பாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் விரைவில் வழங்கப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பரீட்சைகள் திணைக்களத்தின் நிதிப் பிரிவால் செய்யப்பட்டுள்ளன.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) ஏற்பட்டுள்ள நெருக்கடி ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர மற்றும் வர்த்தக சமுர்த்தி அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோரும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கட்சித் தலைவர்கள் இதன் போது முன்மொழிந்தனர். அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவாக ஏற்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவருகின்றது.

---

## இந்திய முதலீட்டாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) முதலீட்டாளர்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் நடைபெற்றது.

இதன்போது இந்தியாவில் இருந்து கிடைக்கும் காலத்தின் தேவை உணர்ந்த ஒத்துளைப்புக்களை நினைவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் -

பொருளாதார சவால்களில் இருந்து மீள்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளுக்கு இந்தியா பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது.

இந்நிலையில், இலங்கையில் காணப்படுகின்ற வளங்களை இனங்கண்டு நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் நிலையான பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கு இந்திய தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

அந்தவகையில், மண்டைதீவு உட்பட வடக்கு மாகாணத்தில் பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு, கடல் பாசி செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் கடற்றொழில் அமைச்சு வழங்கும் என்று தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்னாயக்கா மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர், நெக்டா நிறுவனத்தின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

## யாழ்.பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) அரசிற்கெதிரான போராட்டத்தினை பல்கலைக்கழகத்துக்குள் இருந்தே மூன்று தரப்புகளும் முன்னெடுத்த போதும் அவை ஒரே குரலாக முன்னெடுக்கப்படாமல் அரசியல் கட்சிகள் போன்று தனித் தனியாக முன்னெக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முரண்டு பிடித்தலும் முண்டு கொடுத்தலும்

**தற்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆயுள்காலம் தொடர்ந்து நீடிக்குமா என்பதுதான் கேள்வி.**

**நேற்று நடைபெற்ற மொட்டுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, பிரதமரைப் பதவி நீக்கி, புதிய இடைக்கால அரசு ஒன்றை நிறுவும் தமது எண்ணத்திலிருந்து தாம் விலகி விட்டார் என்பது போல கோடி காட்டியிருக்கின்றார்.**

**ஆனால், ஜனாதிபதி நம்ப முடியாதவர். தமது எந்த முடிவிலும் உறுதியாக நிற்காதவர். ஏற்கனவே இடைக் கால அரசு ஒன்றை அமைப்பேன் என்று மகாநாயக்க தேரர்களுக்கு அவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார் என்பதும் மறந்து விடக் கூடியதல்ல. இடைக்கால அரசை அமைக்கும் முயற்சியை அவர் தொடர்ந்தால் என்னவாகும்?**

**பாவம், புதிதாக அமைச்சுப் பதவிகளை ஏற்ற இளம் அரசியல்வாதிகளின் நிலைமை. அவர்களின் அமைச்சர் பதவி அனுபவம் வாரங்கள் கடந்து நீடிக்கப் போவதில்லை என்றாகி விடும்.**

**பெயர் என்னவோ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு என்பதுதான். ஆனால், இதற்கு முன்னிருந்த அமைச்சரவையோ, இப்போதிருக்கின்ற அமைச்சரவையோ பிரதமரின் விருப்பப்படியான தெரிவே அல்ல.**

**அரசமைப்பின் இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொடுத்தமை மூலம் அமைச்சர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் பிரதமர் என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரத்தை ஜனாதிபதியிடம் தாரைவார்த்துக் கொடுத்து விட்டு இப்போது கையறு நிலையில் முழுசுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ.**

**இப்போது இருக்கின்ற அமைச்சரவை கூட பிரதமரின் விருப்பம், இசைவு, இணக்கத்துக்கு அமைய நியமிக்கப்படவில்லை.**

**தான் நியமிக்காத அமைச்சரவைக்கு – தன் வழிப்படுத்தலில் செயற்படாத அமைச்சரவைக்கு – தான் முடிவெடுக்காத அரசுத் தீர்மானங்களுக்கு – பொறுப்பேற்று பதவியை இழக்க வேண்டிய கட்டாயத்துக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தள்ளப் பார்க்கின்றார் ஜனாதிபதி.**

**ஜனாதிபதி என்ற முறையிலும், அரசுத் தலைவர் என்ற முறையிலும், அமைச்சரவையின் தலைவர் என்ற வகையிலும், சகல நிறைவேற்றதிகாரங்களையும் கொண்டவர் என்ற ரீதியிலும், கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவுகளும், செயற்பாடுகளும், அவரின் வழிகாட்டல்களுமே நாட்டை இன்று இவ்வளவு நெருக்கடி நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன.**

**ஆனால், இதற்கான பிழைகள், தவறுகள், பொறுப்புகள் அனைத்தையும் தமையனாரான பிரதமர் மீது சுமத்தி, அவரது தலையை உருட்டுவதன் மூலம், தாம் தப்பிக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி கோட்டாபய மனக் கோட்டை கட்டுகின்றார்.**

**பிரமரைப் பொறுத்தவரை அவர் பதவியைத் தாமாக விட்டுச் செல்லும் எண்ணத்தில் அடியோடு இல்லை. ஆகவே வரும் வாரத்தில் அவரை பிரதமர் பதவியில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்து, அதன் மூலம் தமது இடைக்கால அரசு அமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய முன்நகர்த்துவாரானால் மோதல் – முரணிலை – வெடிக்கும்.**

**இந்தப் பின்புலத்தில் அடுத்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் அணிகளின் நிலைகள் – நிலைப்பாடுகள் – கணிசமான அளவில் மாறும்.**

**ராஜபக்ஷக்களே எதிரெதிர் தரப்பில் அமரும் சூழலும் கூட வரலாம்.**

**இப்போது இருக்கும் அமைச்சரவை ஓரிரு வாரத்தில் ஆயுளை முடிப்பது போல கோட்டாபயவின் உத்தேச இடைக்கால அரசின் அமைச்சரவை கூட அற்ப ஆயுளில் தூக்கி எறியப்படும் வாய்ப்புகள் அதிகம்.**

**அது வரையான அமைச்சரவைகள் கோட்டாபயவுக்கு இணக்கமானவையாக இருந்தாலும், அதற்குப் பின்னர் வரக் கூடிய அமைச்சரவை ஜனாதிபதி கோட்டாபயவுடன் முரண்டு பிடிப்பதாகவே அமையும்.**

**ஓடு மீன் ஓடி உறுமீன் வரும் வரைக் காத்திருக்கும் கொக்கு போல அத்தகைய முரண்டு பிடிக்கும் அமைச்சரவைக்கு முண்டு கொடுக்கத் தமிழர்கள் காத்திருப்பது நல்லது.**

# உங்களை புரிந்துகொள்கின்றோம் எங்களையும் புரிந்துகொள்ளுங்கள்

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு எதிராக தென்னிலங்கையில் இடம்பெறும் சிங்கள மக்களின் போராட்டங்களைத் தமிழ் மக்கள் புரிந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு, அதே வேளை, தமிழ் மக்களின் வலிகளையும் நியாயங்களையும் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை, அதனால் எழுந்துள்ள போராட்டங்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கைத்தீவு மிக அண்மைய நாள்களில் மிகப்பெரிய நெருக்கடி நிலையை சந்தித்து வருகின்றது. தென்னிலங்கை சிங்கள மக்கள் இந்த நெருக்கடிக்கு எதிராக மாபெரும் எழுச்சியுடன் போராடி வருகின்றனர்.

தென்னிலங்கை மக்களின் இந்த எழுச்சியின் நியாயத்தை கடந்த காலங்களில் பேரவலத்தை சந்தித்த இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களாகிய நாங்கள் புரிந்து கொள்கின்றோம் உணர்ந்து கொள்கின்றோம் மதிக்கின்றோம்.

இந்த நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமான தமிழ் மக்கள் மீது காலங்காலமாக கட்டவிழ்த்துவிடப்பட்ட பாரிய அடக்கு முறைகள் இதுவரை பாராமுகமாகவே தொடர்ந்து வருகின்றமை வேதனைக்குரியது.

இத்தருணத்தில் சிங்கள மக்கள தமிழ் மக்களாகிய எங்களது வலிகளையும் நியாயங்களையும் புரிந்து கொள்ளுமாறு வலியுறுத்தி நிற்கின்றோம்.

உங்களை புரிந்து கொள்கின்றோம் எங்களைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதே தமிழ் மக்களின் ஒருமித்த குரலாக இருக்கின்றது என்பதை ஒருங்கிணைத்த தமிழர் கட்டமைப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது. – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கட்டாயம் பதவிவிலக வேண்டும்

## பாஹியன்கல ஆனந்தசாகர தேரர் கோரிக்கை



சமையல் எரிவாயுவின் விலை 10 ஆயிரமாகவும், ஒரு இறாத்தல் பாணின் விலை 400 ரூபாவாகவும் உயர்வடையும் என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். எனவே நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது என்பதை இவர்கள் நன்கு அறிவார்கள்.

ஆனால் நெருக்டிக்கு தீர்வு காண அரசியல் தியாகம் செய்து பதவி விலகமாட்டார்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கட்டாயம் பதவி விலக வேண்டும் என இலங்கையை பாதுகாப்போம் அமைப்பின் தலைவர் பாஹியன்கல ஆனந்தசாகர தேரர் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும், மகாசங்கத்தினருக்கும் இடையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அலரிமாளிகை,காலி முகத்திடல் உட்பட நாடுதழுவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய நிலைமை தொடர்ந்து நீடித்தால் நாடு பாரிய எதிர்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை பிரதமரிடம் எடுத்துரைத்தோம்.

பொருளாதார நெருக்கடி தொடர்பாக அவதானம் செலுத்தும் போது எரிவாயுவி;ன் விலை 10ஆயிரமாகவும்,ஒரு இறாத்தல் பாணின் விலை 400 ரூபா வரை உயர்வடையும் என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொள்ள நேரிடும் என்பதை இவர்கள் நன்கு அறிவார்கள்.ஆனால் அரசியல் தியாகம் செய்து பதவி விலகத் தயாரில்லை என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியல் தியாகம் செய்து பதவி விலகியே ஆக வேண்டும். – என்றார்.

# மனிதாபிமான உதவிகளைவழங்கத் தயார் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கைக்கு மருத்துவப் பொருளகளை நன்கொடையாக வழங்கும். மேலும் அரசாங்கத்தின் தேவைகளின் அடிப்படையில் மனிதாபிமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் இலங்கைக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுக்குழுவின் தலைவர் லூக்காஸ் பெட்ரிடிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுக்குழுவின் தலைவர் லூக்காஸ் பெட்ரிடிஸ் , வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து பிரியாவிடை நிமித்தம் சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய பங்களிப்பை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் பாராட்டினார்.

மோதல் சூழ்நிலையின் போது கடந்த காலத்தில் ஆற்றிய முக்கிய பங்கு மற்றும் மோதலுக்குப் பிந்தைய மறுவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துக்கு உதவுவதில் அதன் தற்போதைய வகிபாகம் மற்றும் ஆயுதப்படைகள், பொலிஸார் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஐ.எச்.எல். பயிற்சி ஆகியவற்றையும் அவர் நினைவு கூர்ந்தார்.

தற்போதைய பொருளாதார சவால்கள் தொடர்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பீரிஸின் விளக்கத்துக்கு பதிலளிக்கும் வகையில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கைக்கு மருத்துவப் பொருள்களை நன்கொடையாக வழங்கும் என பெட்ரிடிஸ் தெரிவித்த அதேவேளை, அரசாங்கத்தின் தேவைகளின் அடிப்படையில் மனிதாபிமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் மேலும் சுட்டிக்காட்டினார்.

பெட்ரிடிஸின் புதிய பணிக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்காக தனக்கு அடுத்த தலைவருடன் தொடர்ந்து நெருக்கமாகப் பணியாற்றுவதாக உறுதியளித்தார்.

# தந்தை செல்வாவின் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் யுத்தம் மற்றும் பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்டிருக்கா!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி தெரிவிப்பு



(க.கிருபாகரன்)

தந்தை செல்வாவின் ஒற்றுமை எண்ணம் தற்போது தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் வர வேண்டும். இந்நிலையில் அனைவரும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற் காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அன்றைய காலகட்டத்தில் தந்தை செல்வாவின் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால், இந்த நாட்டில் யுத்தமும் ஏற்பட்டிருக்காது. பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டிருக்காது என மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நினைவுதின நிகழ்வு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பொன்.செல்வராசா தலைமையில் மட்டக்களப்பு நகரிலுள்ள தந்தை செல்வா நினைவு முற்றத்தில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் தந்தை செல்வாவை நினைவு கூருகின்றோம். இந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய ஆட்சியாளர்களால் நடத்தப்பட்டிருக்கிறார்கள். இது வரலாறு எமக்குக் கற்றுத் தந்த பாடம்.

இந்த நிலையில் தந்தை செல்வா உயரிய நோக்கோடு, தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோரையும் இணைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கான ஒரே தீர்வு தமிழீழம் தானென வட்டுக்கோட்டைத் தீர்மா னத்தை நிறைவேற்றியிருந்தார்.

அதே ஒற்றுமையின் நிமிர்த்தம் 2001 ஆம் ஆண்டு போராட்ட இயக்கங்கள் மற்றும் மிதவாதக் கட்சிகள் இணைந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெற்றது. அதன் பலனாகவே 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற முடிந்தது. இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சிதைவுண்டு பல கட்சிகளாக உருமாற்றம் அடைந்துள்ளன.

இவ்வாறான காலகட்டத்தில் அவரின் எண்ணம் தமிழ்த்தேசிய பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளுக்கும் வர வேண்டும். அதன் ஊடாகவே தமிழ் மக்களின் விடிவுக்கான காலம் விரைவில் உருவாகும். – என்றார்.

# இலங்கை மக்களின் துன்பியல் வாழ்க்கையை உலகறியச் செய்தவர் பொத்துவில் அஸ்மின்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் புகழாரம்

இலங்கை கலைஞர், கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதி, தென்னிந்திய பிரபல நடிகரும் பாடகருமான டி.ராஜேந்தரின் குரலில் வெளிவந்துள்ள இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பான ஒலிப்பேழை, இந்தக் காலத்தின் மிக முக்கிய அழியாத பதிவாகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலை தொடர்பாக, பாடலாசிரியர் அஸ்மினின் எழுத்துக்களில் உருவான பாடல் இறுவட்டை, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனிடம், கவிஞர் அஸ்மின் கையளித்திருந்தார்.

இதன்போது, கருத்து தெரிவித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் –

இலங்கையின் கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொத்துவில் கவிஞர் அஸ்மின், பல படைப்புகளை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கியிருக்கின்றார். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கலைஞர் அஸ்மின் பழைமை எழுத்துலகில் இருந்து விடுபட்டு, காலத்தின் தேவைகளை கவனத்தில் கொண்டு கவி வரிகளை வடித்து, அவற்றை பாடலாக்கி சமூகத்துக்கு வழங்கியிருக்கின்றமை வரவேற்புக்குரியதாகும்.

அஸ்மினின் திறமைகளை நான் நன்கு அறிவேன். அந்தவகையில், இலங்கையின் இன்றைய நிலையையும், மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் துயரங்களையும் தத்ரூபமாகப் படம் பிடித்து, தனது பாடல் வரிகள் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

கலைஞர் அஸ்மினின் இந்த முயற்சிக்கு தென்னிந்திய பாடகர் டி.ராஜேந்தர், அவரது குரல் மூலம் வழங்கியிருக்கும் உந்துசக்தி உண்மையிலேயே இலங்கை மக்களுடைய மனவலியைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருக்கின்றது. இந்தப்பாடலை இயற்றிய நம் நாட்டுக் கலைஞர் பொத்துவில் அஸ்மினுக்கும், அது போன்று பாடலை பாடிய டி.ராஜேந்தருக்கும், அதே போன்று அவருடன் இணைந்து பாடிய திருகோணமலையைச் சேர்ந்த பாடகர், இசையமைப்பாளர் சமீல், சரோ சமீல் ஆகியோருக்கும், இந்தப் படைப்பை வெளியிட உதவி செய்த அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பொத்துவில் அஸ்மின் ஒரு சர்வதேச கலைஞராக பரிணாமம் பெற்றுள்ளார். இந்தியா, மலேசியாவில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் அவர் கவிமழை பொழிந்து, இலங்கையின் நற்பெயருக்கும் மகுடம் சூட்டியுள்ளார்.

அதேபோன்று, என்னை அநியாயமாக சிறைப்படுத்தியிருந்த வேளை, என்மீது அவர் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாட்டால், எனது துன்பத்தில் பங்குகொள்ளும் வகையில், 'வெளஞ்சி நின்ற வெள்ளாமை' என்ற தலைப்பில் பாடல் ஒன்றை இயற்றி, அதனை சமூகமயமாக்கியதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுகூர விரும்புகிறேன். மேலும், அவரது இலக்கு நோக்கிய பயணம் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். – என்று குறிப்பிட்டுள்ளார்.

# பெற்றோல், டீசலின் தேவை 30 வீதத்தால் குறைந்துள்ளது

பாரியளவில் எரிபொருள் விலையேற்றம் காரணமாக பெற்றோல் மற்றும் டீசலின் தேவை சுமார் 30 வீதத்தால் குறைந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பெற்றோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு பெருமளவில் தணிக்கப்பட்டுள்ளதாகவும், எரிபொருள் வரிசைகள் முடிவுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக நாட்டில் மண்ணெண்ணெய்க்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது ஜெட் எரிபொருள் மண்ணெண்ணெயாக விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாடு முழுவதும் உள்ள 12 பிராந்திய எரிபொருள் களஞ்சியங்களில் மண்ணெண்ணெய் இல்லாததால், கொலன்னாவையில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க வேண்டியுள்ளது.

தற்போது கொலன்னாவ எண்ணெய் சேமிப்பு முனையத்தில் சுமார் 7 ஆயிரம் மெற்றிக் தொன் விமான எரிபொருள் உள்ளது. அதனால் மண்ணெண்ணெய் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை.

தற்போது 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் 92 ஒக்டேன் மற்றும் 95 ஒக்டேன் பெற்றோல் இறக்கப்பட்டு வருவதாகவும் கொழும்பு துறைமுகத்துக் வரும் 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் மற்றும் சுப்பர் டீசல் கொண்ட இரண்டு கப்பல்கள் டொலர்களை செலுத்தாத காரணத்தால் 11 நாள்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

# ராஜபக்ஷவினருடன் எமக்கு இரகசிய தொடர்பு கிடையாது!

## எஸ்.எம்.மரிக்கார் விளக்கம்

ராஜபக்ஷக்களுடன் ஐக்கிய மக்கள் சக்திக்கு எவ்வித இரகசிய தொடர்பும் இல்லை. வாசுதேவ நாணயக்காரவே அவர்களுடன் இரகசிய தொடர்பைப் பேணுகின்றார்.

அதனால் தான் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையிலும் , அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையிலும் கையெழுத்திடாமலுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டோர் அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் போதே நாம் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை ஆரம்பித்துவிட்டோம். அதனை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமக்கும் ராஜபக்ஷக்களுக்கும் எவ்வித இரகசிய தொடர்பும் கிடையாது. வாசுதேவ நாணயக்காரவே அவர்களுடன் தொடர்பில் இருக்கின்றார். அதன் காரணமாகவே ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணையில் அவர் கையெழுத்திடவில்லை.

உண்மையில் அவருக்கு ராஜபக்ஷக்களுடன் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் அவற்றில் கையெழுத்திட வேண்டும். காரணம் மக்களின் குரல் கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலக வேண்டும் என்பதாகும்.

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் மக்கள் இரு பிரதான காரணிகளை எதிர்பார்க்கின்றனர். அவற்றில் முதலாவது அரசியல் கலாசாரம் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதாகும்.

மற்றையது மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதாகும்.

பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு மீள செலுத்த வேண்டியுள்ள வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்க வேண்டும்.

அதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டும். ஆனால் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் சர்வதேச நாணய நிதியத்துக்கு முரணானவர்கள்.

அவ்வாறிருக்கையில் எவ்வாறு அவர்களுடன் இணைந்து இடைக்கால அரசாங்கத்தை அமைத்து ஆட்சி செய்வது? இவர்களுடன் இணைய வேண்டுமெனில் ஆயிரம் தடவைகள் சிந்திக்க வேண்டும்.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பத்திரிகை மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அவற்றை நிறைவேற்றி, வீதிகளில் போராடும் மக்களின் கோரிக்கையையும் நிறைவேற்றுவதே எமது இலக்காகும். அதனை விடுத்து எவ்வித இலக்குமின்றி அவற்றை சமர்ப்பித்து தோல்வி கண்டு மக்களின் போராட்டத்தை எம்மால் காட்டிக் கொடுக்க முடியாது. – என்றார்.

— மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா —
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

# வித்தியாசமாய் சிந்தித்த புதுவைப் புயல்!

## இன்று பாரதிதாசன் நினைவு தினம்

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா என்று போற்றப்பட்டவர்தான் எட்ட யபுரம் தந்த எங்கள் தமிழின் சொத்து பாரதியார். அவரின் கருத்துக்களை மனமிருத்தி அவரின் பாதையில் பல கவிஞர்கள் பயணப் பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கவிஞரும் பாரதியைப் பார்த்த பார்வைகள் அவரவர் சிந்தனைகளாக மலர்ந்திருக்கின்றன. பாரதியாரின் காலத்தில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இருந்திருக்கிறார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை இருந்திருக்கிறார். பாரதிதாசனும் இருந்திருக்கிறார். கவிமணியின் சிந்தனை வேறாயும், நாமக்கல்லார் சிந்தனை வேறாயும், பாரதிதாசன் சிந்தனை வேறாயும் அமைந்திருக்கின்றன. இவர்கள் மூவருமே பாரதியைப் போற்றியாவர்களாகவே இருந்திருக்கிறார்கள். எட்டய புரத்துத்துப் பாரதிக்கு எட்டவே போகாமல் கிட்டவே நிற்கும் வாய்ப்பு புதுவையில் கால்பதித்த கனகசுப்புரத்தினத்துக்கே வாய்த்திருக்கிறது. கனகசுப்புரத்தினத்துக்குத்தான் எட்டயபுரத்து மகாகவி பாரதியின் ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. அந்த ஆசீர்வாதம்தான் பாரதிதாசன் என்று இன்றுவரை அவரை சமூகத்தில் பார்த்திட, கொண்டாட வைத்திருக்கிறது.

பாரதியையும் புரட்சிக்கவி என்று அழைக்கின்றோம். அவரின் வாரிசாக வாய்த்திருக்கும் பாரதிதாசனையும் அழைக்கின்றோம். இருவரையும் புரட்சியின் வடிவமாகவே பார்ப்பதையே சமூகமும் விரும்பி நிற்கிறது. பாரதி வாழ்ந்த காலமோ முப்பத்தொன்பது ஆண்டுகளே யாகும். ஆனால் பாரதிதாசன் அவரைவிட இருமடங்கு காலம் வாழ்ந்திருக்கிறார்.?பாரதியின் தாசனாகவே வாழ்ந்திடவே பாரதி தாசன் ஆசைப்பட்டார். அதுவே தனக்கும், தனது வாழ்வுக்கும் மிகவும் பெருமையானது என்றும் கூட அவர் எண்ணியே இருந்தார். பாரதியைப் போலவே அவரும் புதிதாய், புரட்சியாய் சிந்தித்தார். சிந்தித்தவற்றைத் தன்னுடைய படைப்புகள் வாயிலாகச் சமூகத்தில் இடம் பெறவும் செய்தார். பாரதியின் தாசனாய் அவரின் வாரிசாக வாய்த்த பாரதிதாசன் தன்னுடைய காலத் துக்கு ஏற்ப தன்னுடைய சிந்தனைகளைப் புதிதாய் வெளிப்படுத்தினார் என்பதை மறுத்துரைத்து விடல் முடியாது.

பாரதியார் வாழ்ந்த காலம் பாரததேசம் அன்னியத்துக்கு அடிமைப்பட்டிருந்த காலம். அவரின் வாரிசாய் வாய்த்த பாரதிதாசன் காலமே சுதந்திரக் காற்றினைப் பாரததேசம் சுவாசித்த காலமாகிவிட்டது. அதனால் தன்னுடைய குருவின் சிந்தனைகளை விட வித்தியாசமாய் சிந்திக்கும் அவசியம் பாரதிதாசனுக்கு கட்டாயமாகிவிட்டது. அதனால் பாரதியின் சிந்தனைப் பாதையில் பயணித்தாலும், தனக்கென வித்தியாசமான சிந்தனைகளை பாரதிதாசன் வெளிப்படுத்தி நிற்கிறார் என்பதுதான் உண்மை நிலையாகும்.

தம்முடைய குருவான பாரதியின் பிரிவை முன்னிட்டு பாரதிதாசன்

**நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா**
**காடு கமழும் கற்பூரச் சொற்கோ ......**
**திறம் பாட வந்த மறவன். புதிய**
**அறம் பாட வந்த அறிஞன்**

- இவ்வாறு உளமார உரைத்து நின்றாலும் அவரின் சிந்தனையானது மட்டும் பல நிலைகளில் வித்தியாசமாய் அமைகின்றது என்பதுதான் உண்மையாகும். பாரதி தமிழைப் போற்றுகின்றார். அவரின் வாரிசான பாரதிதாசனும் போற்றுகின்றார்.

பாரதி...

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்**

- என்று உலகத்துக்கு உரத்துத் துணிவுடன் சொன்னவர் என்றவகையில் பாரதி முன்னிற்கிறார் என்பதை எவருமே மறுத்திடல் இயலாது.

ஆனால் அவரின் வாரிசாய் வாய்த்த பாரதிதாசனோ வித்தியாசமாய் தனது சிந்தனையை முன் வைக்கிறார்.

**தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்**

- என்கிறார் பாரதிதாசன்.

உலகமொழிகளில் இனிமையானது தமிழென்று குருவானவர் மொழிகின்றார். அவரின் மொழிதல் புதுமையானதுதான். ஆனால் வித்தியாசமாய் சிந்தித்து தமிழினை உயிர் என்று காட்டுவதும், இன்பத் தமிழ், அமுதம் என்று காட்டுவதும் பாரதிதாசனின் வித்தியாசமான சிந்தனையாய் வெளிப்பட்டு நிற்கிறதல்லவா! அமுதம் என்பது நிரந்தரமாய் உயிருடன் வாழப் பண்ணுவதாகும். தமிழும் எம்மையெல்லாம் நிரந்தரமாய் வாழப் பண்ணும் என்னும் சிந்தனை, வியப்பாய் மலர்கிறதல்லவா ?

பாரதியின் மொழிப் பற்றானது போற்றப் படவேண்டியதே. அன்னிய மொழியான ஆங்கிலத்தை அறவே வெறுத்தார். அன்னை மொழியான தமிழினையே அகத்தில் இருத்தினார். அரியாசனத்தில் அமர்த்தியே பார்த்தார். பாரதி வட மொழியிலும் வல்லமை பெற்று விளங்கினார். அவருக்கு வடமொழியிலும் பற்றிருந்தது. ஆனால் அவரின் வழியில் பயணத்தை ஆரம்பித்த பாரதிதாசனோ முழுக்க முழுக்க தமிழ்மொழிப் பற்றாளராகவே தன் வாழ் நாளெல்லாம் விளங்கினார். வடமொழியை அவர் ஒதுக்கியே நின்றார். திராவிடமே அவரின் சிந்தையில் நிறைந்து காணப்பட்டது. இது அவரின் வித்தியாசமான சிந்தனை என்றும் சொல்லலாம் அல்லவா!



குருவான பாரதியின் தமிழ்மொழி பற்றிய சிந்தனையிலிருந்து வித்தியாசமாய் சிந்தனையினைத் தருவதோடு அதற்காக அவர் பயன்படுத்தும் சொற் கோவைகளும் வித்தியாசமானதாகவே வருகிறது. மரபு யாப்பினைப் பயன் படுத்தினாலும் இங்கு வித்தியாசமாய் சிந்தித்து கூழைக்கூத்தரின் ஆட்டத்தை மனமிருத்தி அதனை ஆட்டத்தோடு கூடிய விதமாய் இசையுடன் பாடக்கூடியவகையில் தமிழையும், தமிழ் சமூகத்தையும் சிந்தித்திந்து அவரால் வழங்கப்பட்ட வித்தியாசமான சிந்தனையாய் இப்பாடல் அமைகிறது.

**திடுகிடும் திடுகிடும் திடுகிடும் திடுகிடும்**

**அஃகஃக கும்பிட்றேன் அல்லா ருக்கும்**
**அஃகஃக வரிஞ்சலா அமைந்திருங்க**
**மக்களெ பெத்த மகரா சருங்க .....**

**என்னடா தம்பி?**
**ஏண்டா அண்ணா?**
**இதோபார் தம்பி எலும்புக்கூடு**
**சதையும் இல்லே சத்தும் இல்லை**
**ஆமாம் திடுகிடும் அதுக்குப் பேர்என்னா?**
**இந்த மருந்துக்கு என்னா பேரு?**
**உள்ளெ தொட்டா உசிரில் இனிக்கும் ;**
**தெள்ளுதமிழ் தம்பி தெள்ளுதமிழ் இதுதான்!**
**இந்த மருந்தே எலும்புக் கூட்டில்**
**தடவுறேன் தம்பி அடிமோ ளத்தை!**
**திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்**

**சிரித்தது பாரடா செந்தமிழ்க் கூடு!**
**விரிந்தது பாரடா அழிந்தநம் நாடு!**
**பாடுது பாரடா பைந்தமிழ் நாடு ....**
**தாயி மாரே தக்கப்ப மாரே!**
**மாயம் இல்லே மந்திரம் இல்லே**
**கருத்து வேணும் நம்ப**
**வருத்தம் நீங்க தேடணும் வழியே!**

தமிழினமானது எலும்புக்கூடாய் இருக்கிறதாம். அதில் சதையும் இல்லையாம்! சத்துமே இல்லையாம்! அதற்குச்சதையும்சத்தும்தந்துபுத்துயிர்ஊட்டவேண்டும் என்னும் வித்தியாசமான சிந்தனையினைக் காட்டும் பாரதிதாசனை வியக்காமல் இருந்திட முடியுமா!

பாரதி வாழ்ந்த காலம் அடிமையிருள் சூழ்ந்திருந்த காலம். பாரதியின் பார்வை பாரததேசத்தின் அடங்கிலும் பரவியே இருந்தது. பாரதத்தாயை மீட்டிடும் பாங்கில் பாரதியின் சிந்தனை அமைந்திருந்தது. ஆனால் அவரின் வாரிசான பாரதிதாசன் காலம் அவரின் சிந்தனையினை வேறு விதமாக்கி விட்டது. பாரதியின் வழியில் பயணித்தாலும் அத்தனையையும் ஏற்று நிற்க அவர் விரும்பாதவராய் வித்தியாசமாய் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்துகிறார். அந்த வகையில் ஒட்டு மொத்த இந்தியாவைவிட்டு அவரின் சிந்தனையானது திராவிட மீட்பாய் மாறுகிறது. பாரதி தமிழை, தமிழினத்தைப் போற்றினார். அதற்காக பலவற்றை உரக்கவே சொன்னார். ஆனால் பாரதிதாசனோ திராவிடச் சிந்தனையாளராய், தமிழ்மொழியின் அடையாளமாய் தனது வித்தியாசமான சிந்தனைகளால் எழுந்து நிற்கிறார்.

சமய நம்பிக்கையினை, தெய்வ நம்பிக்கையினைப் பாரதிகைவிட விரும்பவேயில்லை. மூடநம்பிக்கைகளை எதிர்த்தார். வெறுத்தார். ஆனால் தெய்வம் இருக்கிறது என்பதில் ஆணித்தரமாய் பாரதி வாழ் வெல் லாம் இருந்தார். இந்த இடத்தில் அவரின் வாரிசான பாரதிதாசன் வித்தியாசமாய் சிந்திக்கிறார். ஆரம்பத்தில் சக்தியைப் பாடியே பாரதியின் ஆசீர்வாதத்தைப் பெற்றவர் பிற்பாடு தெய்வீக சக்தியை விட்டு விட்டு மனித சக்தியையே பாடும் நிலைக்குள் வந்து விடுகிறார். பாரதி நாத்திகர் அல்லர். அவருள் ஆத்தீகம் அமர்ந்தே இருந்தது. ஆனால் வித்தியாசமாய் சிந்தித்த காரணத்தால் பாரதிதாசன் முழுதுமே நாத்திகராய் மாறி அதன் வழியில் பயணப்பட்டு, அது சார்ந்த அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகின்றவராய ஆகியே விடுகிறார். இதனால் அவரின் சிந்தனைகள் தன்னுடைய குருவின் சிந்தனைகளிலிருந்து வித்தியாசமாய் புதிய பார்வையினையே காட்டுவதாகவே ஆகியும் விடுகிறது.

கல்விபற்றிய பாரதியின் சிந்தனையிலும் கூட பாரதிதாசன் வித்தியாசமாகவே தன்னுடைய சிந்தனைகளை விதைக்கின்றார். பாரதியின் கல்வி பற்றிய சிந்தனையினை நோக்கும் பொழுது -

**வயிற்றுச் சோறிட வேண்டும் - இங்கு**
**வாழும் மனிதருக்கு எல்லாம்**
**பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்**

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

**வீடுதோறும் கலையின் விளக்கம்**
**வீதிதோறும் இரண்டொரு பள்ளி**
**நாடுமுற்றிலும் உள்ளவூர்கள்**
**நகர்களெங்கும் பலபலபள்ளி**
**தேடு கல்வியிலாத தொருவூரைத்**
**தீயினுக்கு இரையாக மடுத்தல்**

- என்று தன்னுடைய கல்விபற்றிய சிந்தனையைப் பாரதி இப்படிக் காட்டி நிற்கிறார். பெண்களைக் கண்களாய் காணும் பாரதி பெண்கள் வீட்டுக்குள் முடங்கிக்கிடக்காமல் வெளியில் வந்து கற்று தேர்ந்திட கல்விச் சிந்தினையினை விதைத்தும் நிற்கிறார். புதுமைப் பெண்களாய் பெண்கள் வரவும் அழைப்பினை விடுக்கிறார்.

பாரதி வழியில் கல்வி பற்றிச் சிந்தித்தாலும் தனக்கே உரித்தான வித்தியாசமான சிந்தனைகளையும் அவர் முன்வைக்கிறார் என்பதுதான் கருத்திருத்த வேண்டிய விடயமாகும். பாரதிபோல் பெண்கல்வியை வலியுறுத்துகின்றார். பாரதியின் பார்வை வேறு. பாரதிதாசனின் பார்வையோ வேறு.

**கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்**
**கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்**

**மகளிரெலாம் கல்வியறி வொழுக்கமுள ராயின்**
**மருத்துவமே வேண்டாவாம் பிணிமூப்பு வாரா**

**கல்வியறிவுடைய பெண்கள்**
**திருந்திய கழனி அங்கே**
**நல்லறி வுடைய மக்கள்**
**விளைவது நவில வேநான்**

**கல்வியில்லாத பெண்கள்**
**களர்நிலம் அந்நிலத்தில்**
**புல்விளைந் திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை**

**கற்பது பெண்களுக்கா பரணம் - கெம்புக்**
**கல்வைத்த நகை தீராத ரணம்**

**பெற்றநல் தந்தைதாய் மாரே - நும்**
**பெண்களைக் கற்கவைப் பீரே**
**இற்றைநாள் பெண் கல்வி யாலே - முன்**
**நேறவேண் டும்வைய மேலே**

(OOஆம் பக்கம் பார்க்க)

# அண்ணன் என்னடா, தம்பி என்னடா...!

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

கவிஞர் கண்ணதாசனை, தமிழ் கூறும் நல்லுலகம் தீர்க்கதரிசி என்று கூறி மகிழ்ந்த நிகழ்வுகள் பல உண்டு. அந்த வகையில், கடந்த 1965 ஆம் ஆண்டில் சிவாஜி கணேசன் நடித்து வெளிவந்த 'பழனி' திரைப்படத் திற்கு அவர் எழுதிய 'அண்ணன் என்னடா, தம்பி என்னடா' என்ற பாடல் இன்றைய தென்னிலங்கை அரசியலை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. காரணம், பிரிக்கவே முடியாது என்று இருந்த ராஜபக்ஷ சகோதரர்களை பதவி ஆசை, தற்போது பிரித்தே விட்டது எனலாம்.

இருவரில் ஒருவராவது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற சூழ் நிலை தோன்றி உள்ளதாகக் கருதி, ஜனாதிபதி கோட்டாபயாவும் பிரதமர் மஹிந்தவும், அடுத்தவரைக் காவு கொடுக்கும் வேலையில் முழு மூச்சாக இறங்கி உள்ளார்கள் அவர்களைப் பொறுத்தவரையில், நாடாளுமன்றத்தின் உள் முன்வைக்கப்படும் ராஜபக்ஷ எதிர்ப்புக் கோஷங்களும், வெளியே, கொழும்பு காலி முகத்திடலில் தொடரும் மக்கள் போராட்டமும் பெரிய விடயமல்ல என்று எண்ணுவதாகவே தெரிகிறது.

இதன் காரணமாகவே, கோட்டா தரப்பினால், ஜனாதிபதி புதிய, இடைக்கால அரசை ஏற்படுத்தத் தயாராக இருக்கிறார் என்ற செய்தி அவ்வப்போது கசிய விடப்படுகிறது. அதாவது, அத்தகைய அரசில் மஹிந்த பிரதமராக இருக்க மாட்டார். அதாவது, ஜனாதிபதி கோட்டாவை தவிர வேறு ஒரு ராஜபக்ஷவும்



அரசில் இடம்பெற மாட்டார்கள்.

இதற்காக மாற்று மருந்தே, மஹிந்தவின் திட்டம். அதாவது தனது தம்பி வகிக்கும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை நீர்த்துப்போகச் செய்து விட்டு, அதனைக் காரணம் காட்டி, இருவருமே தத்தமது பதவிகளை தக்க வைத்துக்கொள்வது. ராஜபக்ஷக்களின் நன்மையை(?) மட்டுமே கருத்தில் எடுத்துக் கொண்டால், இருவரது திட்டங்களிலும், இதுவே அவர்களுக்கு தேவையானது.

தற்போதைய சூழலில், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம் ஒப்படைத்தாலும், அண்ணன் - தம்பி, அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்கும் நாடாளுமன்றம், ஆகிய மூவரிடையே ராஜபக்ஷக்களின் ஆட்சியே மேலும் தொடரும். இந்த உண்மை, ஏனோ, கோட்டா தரப்பிற்கு புரியவில்லை என்று தோன்றுகிறது.

கோட்டா தரப்பின் திட்டத்தில் வேறு ஓர் ஓட்டையும் உள்ளது. அதாவது, அவர் விரும்புவது போலவே, மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பி விட்டு, இடைக்கால அமைச்சரவை ஒன்றை அமைத்தாலும், அதனால் மட்டுமே அவரது பதவிக்கு ஆபத்து இல்லை என்று ஆகிவிடாது. அண்ணனை வீட்டுக்கு அனுப்பி விட்டு, அரசியல் அரிச்சுவடியைச் சரியாகப் படித்திராத தம்பியை வீட்டுக்கு அனுப்புவது, ராஜபக்ஷ எதிர் அரசியல் தரப்புகளுக்கு இன்னமும் எளிதான வேலை ஆகிவிடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

### உரிமைக்கான போராட்டம்

தமிழர் தரப்புகளை பொறுத்தவரையில், காலி முகத்திடலில் தற்போது நடக்கும் போராட்டத்திற்கும், கடந்த 1957 ஆம் ஆண்டு, தனது மக்களின் உரிமைகளுக்காக தந்தை செல்வா தலைமையிலான போரட்டத்திற்கும் நிரம்பவே வித்தியாசங்கள் உள்ளன. சிங்கள மக்களையும், அவர்கள் சார்ந்த அரசியல் தலைமைகள் மற்றும் அரசு இயந்திரம் பொறுத்தவரை, தந்தை செல்வா தலைமையிலான போராட்டம் தங்களைச் சார்ந்ததல்ல. அவர்களுக்கு அந்த போராட்டம் உரிமை சார்ந்த போராட்டம். ஒடுக்கப்பட வேண்டியது.

தற்போதைய தென்னிலங்கை போராட்டம், உணவு, மருந்து வகைகள் மற்றும் பிற அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாட்டிற்கும், உச்சி தெரியாத விலைவாசி உயர்வுக்கும் கொழும்புவில், வழமையாகவே ராஜபக்ஷக்களுக்கு எதிரான நடுத்தர வர்க்கம் முன்னெடுத்துள்ள போராட்டம். இன்னமும் சொல்லப்போனால், தேர்தல் அரசியலில் ராஜபக்ஷக்களிடம் தோல்வி அடைந்த தரப்புகள், இந்த மக்கள் போராட்டத்தில் குளிர் காய்கிறார்கள். அல்லது, இதுவே ராஜபக்ஷக்களின் கணிப்பு என்று தெரிகிறது.

இத்தகைய மக்கள் போராட்டத்தில் தமிழர் தரப்பு கலந்து கொள்வது ஒரு விடயம். ஆனால், அடுத்த கட்டம் என்ன என்று தெரியாமல், அரசமைப்பு சார்ந்த நாடாளுமன்ற விடயங்களில், தமிழர் கட்சிகள் எடுத்துக் கையாள்வது என்பது வேறொரு விடயம். அதிலும் குறிப்பாக, அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை எந்தவொரு தரப்பும் தங்களிடம் காட்டவில்லை என்று சுமந்திரன் கூறியதில் இருந்து, ராஜபக்ஷ எதிர் தென்னிலங்கை கட்சிகளின் போக்கு புரிகிறது. கடந்த ரணில் ஆட்சியை போலவே, தமிழ் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கறிவேப்பிலையாகவே பயன்படுத்த விரும்புகிறார்கள் என்று.

இந்தப் பின்னணியில், தற்போதைய தென்னிலங்கை அரசியல் பிரச்சினையில், நாடாளுமன்றம் சார்ந்த அலகுகளில், தமிழர் தரப்பு சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் முக்கியத்துவம் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. ஆனால், அவர்களின் நிலைமையோ, இரு தலை கொள்ளி எறும்பின் நிலைமையில் உள்ளது.

தற்கால தமிழ் இளைஞர்களுக்கு புரியும் வகையில் சொல்ல வேண்டுமென்றால், இரு தலை கொள்ளி எறும்பு என்ற சொல்லாடல், இரண்டு தலைகளைக் கொண்ட கொள்ளி எறும்பை குறிப்பது அல்ல. மாறாக, இரண்டு பக்கமும் பற்றி எரியும் கொள்ளி கட்டையின் நடுவில் மாட்டிக்கொண்ட எறும்பின் நிலையை குறிக்கும். தற்போது, தென்னிலங்கை அரசியல் பிரச்சினையில் சிக்கிக் கொண்டுள்ள தமிழ்த் தேசியம் குறித்து பேசும்



நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் கட்சிகளின் நிலையும் இதுவே.

இந்தப் பிரச்சினை குறித்து, சுமந்திரன் மற்றும் விக்னேஸ்வரன் தெளிவான கருத்துக்களை கூறி உள்ளார்கள். அதாவது, ராஜபக்ஷக்கள் என்ற சிங்கத்தின் வாயில் இருந்து தப்பிக்க, சிங்கள - பௌத்த இனவாதம் பேசும் விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில போன்ற கரடியின் கையில் சிக்க தமிழர் தரப்பு தயாராக இல்லை.

இந்தக் கருத்தாடலை தொடர்ந்தே, இது வரை மௌனம் காத்த சஜித் பிரேமதாஸ, தானும் தனது தந்தையும் எப்போதுமே பதின்மூன்றாவது திருத்தத்திற்கு ஆதரவானவர்கள் என்று கூறி உள்ளார். ஆனால், தந்தையார் ரணசிங்கே பிரேமதாஸ எப்போது பதிமூன்றை ஆதரித்தார் என்று சஜித் கூறவில்லை. அது போன்றே, கடந்த ஆட்சிகாலத்தில் மூத்த அமைச்சரான அவர் எத்தனை முறை அமைச்சரவைக் கூட்டங்களிலோ அல்லது வெளியிலோ பதின்மூன்று குறித்து தனது கருத்தை பதிவிட்டார் என்பது குறித்தும் அவரால் எதுவும் கூற முடியாது.

தற்போதைய பிரச்சினை, பதின்மூன்று குறித்தது அல்ல. மாறாக, ராஜபக்ஷ ஆட்சியை எப்படி வீட்டிற்கு அனுப்புவது, அதிலும் குறிப்பாக, அண்ணன் - தம்பியரை சேர்ந்து அனுப்ப முடியுமா, அல்லது தனித்து என்றால், யாரை முதலில் அனுப்புவது, எவ்வாறு முதலில் அனுப்புவது, என்பன போன்ற தந்திரோபாயங்கள் குறித்தது.

### 'நல்ல பிள்ளை' வேடம்

தற்போதைய பொருளாதார சிக்கல்களினால், சர்வதேசத்திடம் கையேந்தி நிற்க வேண்டிய நிலையில், மக்கள் போராட்டத்திற்கு எதிராக பிரச்சாரங்கள் எதனையும் ராஜபக்ஷ தரப்புகள் முன்னெடுக்கவில்லை என்றே கருத வேண்டும். அதற்காக, சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கேட்கும் சூழல் தோன்றியிராவிட்டால், அவர்கள் காவல் துறையினரையும் இராணுவத்தினரையும் மட்டும் மறைவின்றிக் களத்தில் இறக்கி விட்டு களப் பலி எடுப்பார்கள் என்றல்ல பொருள்.

ராஜபக்ஷக்களைப் பொறுத்த வரையில், பொருளாதாரப் பிரச்சினை நாட்டிலுள்ள தனி மனிதன் ஒவ்வொருவரையும் பல்வேறு விதமாக பாதித்துள்ளது. அவர்களது, ஆதங்கத்தின் வெளிப்பாடு இவ்வாறு அமைதி போராட்டமாக வெடித்துள்ளது தவிர்க்க முடியாதது என்பதனை அவர்களும் புரிந்தே வைத்திருக்க வேண்டும். போராட்டம் வன்முறை வழியை தேடாத வரை, அமைதி போராட்டத்தை அனுமதிப்பதன் மூலம், சர்வதேசத்திடம் தாங்கள் நல்ல பிள்ளை என்று கூறிக்கொள்வதற்கான வாய்ப்பு இன்னமும் இருக்கிறது என்றே அவர்கள் கருதுவார்கள்.

அந்த வகையில், போராட்டத்தில் கலந்து கொள்ளும் சிங்கள இளைஞர்களுக்கு, ஜே.வி.பி. போராளி இயக்கத்தின் நிறுவனர் ரோஹண விஜயவீரவின் மகன் தலைமை தாங்க வேண்டும் என்ற சமூக வலைத்தள எதிர்பார்ப்புகள் பிரச்சினைகளை வளர்க்குமே தவிர, எந்தவொரு பிரச்சினைக்கும் முடிவைத் தேடித் தராது. அரச தலைமை மற்றும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு அப்பால், அரசு இயந்திரம், அவருடைய தலைமையில் புதிய போராளி குழு ஏதாவது தோன்றி விடுமோ என்று கவலைப்படும். அமைதி போராளிகளும், தங்களது முன்னெடுப்பு கொச்சைப்படுத்தப் பட்டுவிடுமோ என்று அச்சப்படுவர்.

எப்போதாவது, போராட்டம் வன்முறையில் அடி எடுத்து வைத்தால், சர்வதேசத்தின் நிலைப்பாடும் மாறிவிடும் சூழ்நிலை உருவாகி விடும். அதுவே ராஜபக்ஷக்களுக்கும் அவர்களை போன்ற அரச தலைமைகளுக்கும் ஆதரவாக போய்விடும். இனப்பிரச்சினையில் தமிழர் தரப்பிற்கு பின்னடைவு ஏற்பட்டது இவ்வாறுதான்.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பின், உலகளவில், தீவிரவாதம் குறித்து சர்வதேசத்தின் கோட்பாடுகள் மாறின. ஆனால், வன்னியில் முடங்கிக் கிடந்த விடுதலைப் புலிகள் தலைமையால், இந்த மாற்றங்களை அவதானிக்க முடியவில்லை. இடித்துச் சொல்லும் அறிவுஜீவிகள் ஒன்றில் இல்லாது ஆக்கப்பட்டிருந்தார்கள். அல்லது ஓரம் கட்டப்பட்டிருந்தார்கள். இதன் பின் விளைவுகளையே, விடுதலைப் புலிகள் இயக்கம் பின்னர் சந்தித்தது. தமிழர் தரப்பு இன்று வரை சந்தித்து வருகிறது.

### குதிரைப் பேரம், கூட்டாட்சி

இருவரில், பிரதமர் மஹிந்தவை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பதே நடைபெறக் கூடிய விடயம் என்று எதிர் கட்சியினர் கருதுகின்றனர். அதுவே, ஆளும் கட்சியின் புரட்சி குழு என்று தங்களை காட்டிக் கொள்ளும்



வீரவன்ஸ வகையாறாக்களின் நிலைமையும் கூட. அவர்கள் கையில் 40 எம்.பிகள் இருக்கின்றனர் எனக் கணக்குக் காட்டினாலும், மஹிந்தவை மட்டும் காட்டிக் கொடுக்கும் அவர்களுடைய உள்வீட்டுத் திட்டங்களுக்கு எத்தனை பேர் ஆதரவு தெரிவிப்பார்கள் என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியவாதி மாமனிதர் தராக்கி சிவராம் தேசத்தைப் பிரிந்து இன்று 17 ஆண்டுகள்

**- பா.அரியநேத்திரன் -**

மட்டக்களப்பு மண்ணில் அவதரித்த டி.சிவராம் என்ற சொல்லின் பின்னால் உண்மை, நேர்மை, நட்பு, துல்லியம், தர்க்கீகம், மாக்சீசம், தீர்க்கதரிசனம் எனப் பல்வகைப் பண்புகளும் பல்துறை ஆற்றல்களும் விரிந்து கிடக்கின்றன. ஒப்பாரும் மிக்காருமில்லாத தனித்துவமான, உலகமே வியந்து அந்த ஊடகப் போராளியை, அரசியற் சிந்தனையாளனை, மானிட நேயவாதியை, நாட்டுப்பற்றாளனை, விடுதலைவிரும்பியை, எல்லாவற்றிற்கும் மேலாக எனது மானசீகக் குருவை காலனிடம் பறிகொடுத்து 17 ஆண்டுகள் கடந்து விட்டன.



சிவராமுக்கு நிகர் சிவராம்தான். வேறு யாராலும் அந்த வெற்றிடத்தை ஈடு செய்ய முடியாது.

சிவராம் 11.08.1959 இல் மட்டக்களப்பில் அவதரித்து, புனித மைக்கல் கல்லூரியில் கல்விகற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானவர். 1982 இல் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது அன்றைய நாளில் வடகிழக்கில் இளைஞர் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி, இன முரண்பாட்டின் தீவிரம், கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறையின் கொடூரம் என்பனவற்றினால் தமிழ் இளைஞர்கள் போராட்ட இயக்கங்களின் பால் சென்றபோது டி.சிவராமும் அந்த இளைஞர்களில் ஒருவராக இருந்தார்.

காந்தீயம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் இணைந்திருந்த டி.சிவராம். பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாமல் தமிழர் சுய நிர்ணயத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்ட போராட்ட அமைப்புக்களில் தமிழீழ விடுதலைக்கழக அமைப்பில் (புளொட்) இணைந்து தனது தாயகத்திற்கான பணிகளை 'எஸ்.ஆர்' என்ற புனைபெயருடன் செய்ய ஆரம்பித்தார்.

வடக்குக் கிழக்கின் மூலை முடுக்குக் கிராமங்கள் முதல் காடுகள், மலைகள் ஈறாக கால்நடையாகவும், உந்துருளியிலும், ஈருருளியிலும் அலைந்து திரிந்து மக்களைச் சந்தித்தவர். அவர் சென்ற இடமெல்லாம் அப்பிரதேசத்தின் சமூகப் பண்பாட்டு விழுமியங்கள், பொருளாதார வளங்கள், புவியியல் நிலைமைகள், இராணுவக் கேந்திரத்தன்மை என்பவற்றினை மிக ஆழமாகக் கிரகித்துக் கொண்டவர். இதனால்தான் பின்னாளில் அவரால் பத்திரிகைத்துறையில் ஜாம்பவானாக விளங்க முடிந்தது.

1980 இல் அதிகார பூர்வமாக புளொட் இயக்கம் தனது அரசியற் செயற்பாட்டை யாழ்ப்பாணத்தில் நிறுத்துவதாக பிரகடனப்படுத்தும் அறிவித்தலை ஈழநாடு பத்திரிகை மூலம் வழங்கிவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் தனது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நண்பர்களின் உதவியோடு கொழும்பில் வசித்துவந்தாலும் புளொட் இயக்கத்தில் ஆதரவாகவும் அதே நேரம் இலங்கையின் முக்கிய சிங்கள அரசியல்வாதிகளுடனும், கல்விமான்களுடனும் தொடர்புகளைப் பேணி வந்தார்.

இதன்பின்னர் 1987 இல் நடந்த இந்திய – இலங்கை ஒப்பந்த காலத்தில் அப்போது புளொட்டின் தலைவராக இருந்த உமாமகேஸ்வரன் அவர்களால் புளொட் அமைப்பின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட போதும் புளொட் அமைப்பு மேற்கொண்ட மாலைதீவு ஆட்சிக் கவிழ்ப்பு, ஜே.வி.பியுடனான தொடர்பு, புளொட் அமைப்பின் கொள்கை விலகல், அமைப்பின் நிர்வாக ஒழுக்கச் சீர்கேடுகள் காரணமாக முற்று முழுதாக புளொட் அமைப்பிலிருந்து வெளியேறினார் என்பதை அவரே பலதடவை எம்முடன் கூறினார்.

அதன்பின்னர் 2000 ஆம் ஆண்டில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஆலோசகராக அவர் இருந்தார். நான் பொருளாளராக செயல்பட்டேன். இதுவே தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு, கிழக்கில் 70 சத வீத நிலப்பரப்பை தன்னகத்தே வைத்து நடைமுறை அரசொன்றை நிர்வகித்த காலம் இந்த காலத்தில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கும் முற்சிகள் விடுதலைப்புலிகளின் வேண்டுகோள் நிமிர்த்தம் முன்எடுக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தில் இருந்த மாமனிதர் சிவராம், நான் உட்பட சில ஊடகவியலாளர்கள் பல்வேறுபட்ட அரசியல் கட்சி தலைவர்கள், போராட்ட இயக்கங்களின் தலைவர்களுடன் ஊடாட்டங்களை மேற்கொண்டோம். ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரைத் தனித்தனியாக நானும் சிவராமும் இன்னும் சில ஊடகவியலாளர்களும் கொக்கட்டிச்சோலை சோலையகத்திற்கு அழைத்து விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தலைமைகளுடன் கலந்துரையாடி, அந்த முடிவுகள் வன்னிக்கு அனுப்பப்பட்டு, பல சுற்றுப் பேச்சுகளின் பின்னரே 2001 இல் உத்தியோக பூர்வமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது.

சிலர் வரலாறுகளை மறைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தம் இல்லை எனவும் கூறுவது வேடிக்கையான விடயம்.

ஓர் இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு 70 வீத நிலம்பரப்பை வடக்கு கிழக்கில் நிர்வகித்த விடுதலைப் புலிகள் அவர்களுக்கு தெரியாமல் அல்லது அவர்களின் அனுமதி இன்றி இன்னுமொரு அரசியல் கட்சியாக வேறு ஒரு தரப்பை உருவாக்க விட்டிருப்பார்களா? என்பது கூட அறியாமல் சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் தமிழீழ விடுதலை புலிகள் சம்பந்தம் இல்லை என கூற முற்படுவது அப்பட்டமான பொய்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் மாமனிதர் சிவராம் அவர்களின் பங்கு இருந்ததையும் மறுக்க முடியாது.

சிவராம் பத்திரிகைத்துறையாளர் மட்டுமன்றி இனப்பற்றும், நேர்மையும், துணிச்சலும் மிக்க ஊடகவாதி. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அறிவுசார் புலமையுள்ள ஓர் அரசியல், இராணுவ ஆய்வாளன். புத்திஜீவிகள் வியக்கும் வண்ணம் இலாவகமான பொருள்செறிவுடைய சொல்லாடல்களை பயன்படுத்தி அலாதியாக அவருடைய பேனா ஆய்வுக்கட்டுரைகளை வரையும். தர்க்க ரீதியானதும், வாசிப்போரின் அறிவியல் தேடலுக்கு நல்ல தீனியாகவும், அதேநேரம் மனதைக் கவர்ந்து பதியும் வண்ணம் மாக்சீயக் கருத்துக்கள் அவருடைய ஆய்வுக்கட்டுரைகளில் பலமாகவும், ஆழமாகவும் பொதிந்து கிடக்கும். தமிழர் தாயகத்தின் புவியியல் கேந்திரத்தன்மை, பிராந்திய வல்லாதிக்க புவிசார் அரசியல் நிலைப்பாடு என்பவற்றை போரியல் இராணுவ நோக்கில் தர்க்கீகமாகவும் ஆழமாகவும் அலசி ஆராய்ந்து அவர் எழுதும் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளை பாமரமக்கள் முதல் சிங்கள புத்திஜீவிகள் வரை படித்து பயன் பெற்ற வரலாறுகள் உண்டு.

இவ்வாறு பத்திரிகைத் துறையில் பல்வகைத் தன்மை கொண்டவராக விளங்கிய சிவராம் இலங்கையில் இனப்படுகொலை நிகழ்கின்றது என்பதனை வரலாற்று, அறிவியல், புள்ளி விவரவியல் தரவுகளோடு வெளிப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த வேளை அவருக்கு தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது அசாத்தியத் துணிவுடன் இந்த மண்ணை விட்டு நான் எங்கே போவது? சாவு வருவதெனில் இந்த மண்ணிலேயே எனக்கு நிகழட்டும் என்று உறுதிபடக்கூறி சாவின் விளிம்பில் நின்றுகொண்டும் தனது பேனாவினால் புதிய சரித்திரமொன்றை படைத்துக் கொண்டிருந்தவர் மாமனிதர் சிவராம். கடந்த 2005, ஏப்ரல், 28 ஆம் திகதி இரவு கொழும்பு நகரில் வைத்து கடத்தப்பட்டு மறுநாள் ஏப்ரல் 29 இல் நாடாளுமன்றத்தின் அருகே அவரின் உடலம் கண்டெடுக்கப்பட்டது.

இன்று அவர் எமை விட்டு பிரிந்து 17 ஆண்டுகள் கடந்த போது இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக சிங்கள மக்களே திரண்டு ராபக்ஷ குடும்பத்திற்கு எதிராகப் போராடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும், அவரின் சகோதரரான கோட்டபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் பதவியில் இருக்கும் காலத்திலேயே மாமனிதர் சிவராம் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்




# மயூராசனம்

**(இது ஆண் மயில் போன்று தோற்றமளிப்பதால் இவ்வாசனத்திற்கு இப்பெயர் வந்தது.)**

**செய்முறை -**

படி 1. கம்சாசனத்தின் முழு நிலையாக மயூராசனம் அமைகின்றது. படத்தில் காட்டியவாறு வஜ்ராசன நிலையில் இருந்தபடி கைகளை உறுதியாக தரையில் ஊன்றியபடி இரு கால்களையும் ஒன்றாக அணைத்தவாறு தரை மட்டத்தில் இருந்து தூக்க வேண்டும். உடலை இரு கைகளால் தாங்கியபடியிருக்க உடல் நேர் கோட்டில் இருக்க வேண்டும்.

**பலன்கள் :** கைகள், மூட்டுக்கள் உறுதி பெறும். வயிற்றுப் போக்கை தடுக்கும். ஜீரண சக்தி கூடும். வயிறு சம்பந்தமான எல்லா வித கோளாறுகளையும் சீர்செய்யும். உடலின் சமநிலை பேணப்படும். உடல் வலிமை பெறும். கைகள், கை மூட்டுகள் பலமடையும். கண் மற்றும் காது, மூக்கு, தொண்டை தொடர்பான பிரச்சினைகள் நீங்கும். உடல் இளமை, சுறுசுறுப்படையும். மூலவியாதி, மலச்சிக்கல், வாய்வு தொல்லைகள், நீரிழிவு, நித்திரை பிரச்சினை முதலியவற்றுக்கு நல்ல ஆசனமாகும்.

**- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

# கோபம் கொள்ளாதீர்!




கோபத்தைக் கொள்வதற்குக் காரணம் ஒருவனிடத்து உண்டாயினும், அதனைச் கொள்ளலாகாது. கோபம் தோன்றுமாயின் மனக்கலக்கம் உண்டாகும். அது உண்டாகவே அறிவு கெடும். அது கெடவே, உயிர் கணமேல் அருள. இல்லையாகும். அது இல்லையாகவே, அவற்றுக்குத் துன்பஞ் செய்தல் நேரிடும். ஆகையால். கோபத்தை எந்நாளும் அடக்கல் வேண்டும்.

யாவனொருவன் தம்மை இழிவாகச் சொல்லிய பொழுது தம்மிடத்து அவ்விழிவு உள்ளதாயின், 'இது நமக்கு உள்ளதே' என்று தம்மைத் தாமே நொந்து திருத்தமடைதல் வேண்டும். அப்படிச் செய்யாது கோபித்தாராயின், தமது கோபம், அநீதி என்பது தமக்கே தெரியுமாதலாற் தம்மனமே தம்மைக் கண்டிக்கும். தம்மிடத்து அவ்விழிவு இல்லையாயின், 'அவன் சொல்லியது பொய்; பொய்யோ நிலைபெறாது' என்று அதனைப் பொறுத்தல் வேண்டும். நாயானது தன்வாயினாற் கடித்த பொழுதும் மீட்டத் தம் வாயினால் அதனைக் கடிப்பவர் இல்லை. கீழ் மக்கள் தம் வாயினால் வைதபொழுது மேன்மக்கள் மீட்டுத் தம் வாயினால் அதனைப் பொறுத்தல் வேண்டும். மேன்மக்கள் மீட்டுத் தம்வாயினால் அவரை வைவரோ, வையார்.

தமக்குப் பிறர் தீங்குசெய்த பொழுது தாம் அதனைப்பொறுப்பதேயன்றி 'அவர் நமக்குச்செய்த தீங்கினாலே எரிவாய் நரகத்தில் வீழ்வாரே' என்று இரங்குவதும் அறிவுடையவருக்குக் கடன். தன்னை வெட்டிய குடாரத்துக்கும் தனது நறுமணத்தயே கொடுக்குஞ் சந்தனமரம் போலத் தமக்குத் தீமை செய்தவருக்கும் நன்மையே செய்வது அறிவுடையோருக்கு அழகு.

வலியார்மேற் செய்யுங்கோபம் அவருக்குத் தீங்கு செய்யாமையால், அதனைத் தடுத்தவிடத்துந் தருமமில்லை. மெலியார்மேற் செய்யுங் கோபம் அவருக்குத் தீங்கு செய்தலால், அதனைத் தடுப்பதே தருமம். வலியார் மேற் செய்யுங் கோபம் இமமையில் அவராலே துன்பமொன்றையே அடைவித்தலாலும், மெலியார் மேற்செய்யுங் கோபம் இம்மையிலே பழியையும் மறுமையிலே பாவத்தையும் அடைவித்தலாலும் இதுவே மிகக் கொடியதாகும். ஆகவே கோபம் ஓரிடத்தும் ஆகாதென்பதே துணிவு.

ஒருவனுக்கு அருளினால் உண்டாகும் முகமலர்ச்சியையும் மன மகிழ்ச்சியையுங் கொன்று கொண்டெழுகின்ற கோபத்தின் முற்பட்ட பகை வேறில்லை. ஆதலினாலே, தன்னைத் தான் துன்பமடையாமற் காக்க நினைத்தானாயின், தன் மனத்திலே கோபம் வராமற் காக்கக் கடவன். காவானாயின், அக்கோபம் அவனையே அருமையாயினுங் கடுந்துன்பங்களை அடைவிக்கும்.

**- இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து -**


# கோளறு பதிகம்

பாடல் - 11

**தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி**
**வளர்செம்பொன் எங்கும் நிகழ**
**நான்முகன் ஆதியாய பிரமா புரத்து**
**மறைஞான ஞான முனிவன்**
**தானுறு கோளுநாளும் அடியாரை வந்து**
**நலியாத வண்ணம் உரைசெய்**
**ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்**
**அரசாள்வர் ஆணை நமதே!**

பொழிப்பு :

தேன் நிறைந்து ஒழுகும் பூக்கள் நிறைந்த சோலைகளும் கரும்பு ஆலைகளும் நெற்பயிர்கள் விளைந்து கொழிக்கின்ற வயல்களும் பரிசுத்தமான 'அபரஞ்சி' எனும் பொன் எங்கும் மின்னித் திகழ்கின்ற இடமும் ஆணவத்தால் ஒரு தலையை இழந்து நான்முகனான பிரம்மா, அருமை, பெருமை உணர்ந்து முதலில் அடிபணிந்து வழிபடும் இடமான, பிரம்மாபுரம் என்றழைக்கப்படும் சீர்காழியின் மண்ணில் பிறந்து, நான்கு வேதமும் கற்றுத் தெளிந்த ஞான முனிவனாகிய, ஞானசம்பந்தனாகிய நான் பாடிய செந்தமிழ்ச் சொற்களாலான பாமாலையை, தினமும் ஓதுவாரை நாளும் கோளும் எதுவுமே செய்யாது. பூவுலகில் அனைத்து வளமும் கொழித்து நீண்ட ஆயள், திட ஆரோக்கியம், சகல செளபாக்கியம் பெற்று அரசர் போல் வாழ்வாங்கு வாழ்ந்து, பின் பிறப்பு இல்லாத பெருவாழ்வானதைப் பேரரசனான பரம சிவனார் தனக்குள் அமர்த்தியருளி ஆளுவார் - இது என் மேல் ஆணை!



**- ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன் -**

**(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து)**

# அயலவரை நேசிப்போம்




எங்கள் வீட்டிற்கு அண்மையில் வசிப்பவர்கள் எல்லோரும் எமக்கு அயலவர்கள் தான்.

எமது குடும்பத்திற்கு அடுத்தபடியாக எங்கள் உறவினர்கள் என்பதையும் தாண்டி அவர்கள்தான் எம்மோடு சார்ந்தவர்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

எங்களை அதிகம் தெரிந்தவர்கள் எங்கள் அயலவர்களே!

அவர்களை நாம் நிச்சயம் நேசிக்கவேண்டும்.

அயலில் உள்ளவர்களை நாம் ஒருபோதும் பாரபட்சம் பார்க்கக் கூடாது.

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து நிற்பவர்கள் அவர்கள்தான்.

அயலில் உள்ளவர்கள் வயதிற் சிறியவர்களோ முதியவர்களோ எவர் என்றில்லை அவர்களுக்கு உரிய மரியாதையோடு நாம் நடந்துகொள்ளப் பழக வேண்டும்.

இந்தப் பண்பினை நாம் வளர்த்துக் கொண்டால் எங்கள் குடும்பமும் எண்ணிக்கையிற் பெரிய குடும்பம் என்று மாறுவதை நிச்சயம் உணர முடியும்.

நாம் அன்றாடம் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பார்க்கின்றோம்தானே!

அதில் என்ன தெரிகிறது? நாம் சிரித்தால் அதுவும் சிரிக்கிறது. நாம் அழுதால் அதுவும் அழுகிறது. நம் செயல் எதுவோ அதையே அந்தக் கண்ணாடியும் பிரதி பலிக்கிறது.

அன்பானவர்களே! இப்படித்தான் நம் அயலவர்களும் என்பதை ஒருபோதும் நாம் மறந்துவிடக்கூடாது.

அயலவர்களுக்குத் தொந்தரவு தரும் விதத்தில் எந்தச் செயலையும் நாம் செய்யக்கூடாது.

அவர்களின் அமைதியான வாழ்க்கைக்கோ சுகாதாரமான வாழ்க்கைக்கோ நாம் ஒருபோதும் இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடாது.

அன்பானவர்களே! நாங்கள் எந்த அளவிற்கு எமது வீட்டை நேசிக்கின் றோமோ அந்த அளவிற்கு அயலவர்களும் தங்கள் வீட்டை நேசிப்பார்கள் என்ற அடிப் படை மனிதாபிமானத்தை நாம் புரிந்து கொண்டால், நிச்சயமாக நாம் அவர்களுக்கு எந்த விதத்திலும் தொந்தரவு கொடுக்கமாட் டோம்.

அயலவர்கள் மீது நாம் பேதம் பாராட்டக்கூடாது.

அவர்களை நாம் உதாசீனம் செய்தால் அதற்கான விளைவுகள் நிச்சயம் நம்மை வந்து சேரும்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பார்கள்.

ஒற்றுமையோடு நாம் இருந்தால் அது நமக்கு எப்போதும் பலமாகவே அமையும்.

நாம் அனைவரும் ஒற்றுமையோடு இருந்தால் எங்கும் மகிழ்ச்சி பொங்கும்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை நாம் எப்போதும் மனதிற் கொண்டு செயற்படவேண்டும்.

அன்பானவர்களே! ஒற்றுமையோடு இருந்தால் எம்மால் எதையும் சாதிக்க முடியும். நாம் பிறரை நேசித்தால் நம்மையும் எல்லோரும் நேசிப்பார்கள். நல்ல அயல வர்களோடு வாழ்வதில் எத்தனை மகிழ்ச்சி! எத்துணை இனிமை! எவ்வளவு நன்மை!

**- குணரட்ணம் சுதாகரன் -**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்)**

**இது தராக்கி சிவராம் மறைந்த கையோடு எழுதப்பட்ட கட்டுரை. பதினேழு ஆண்டுகளின் பின்னர் மீளப் பிரசுரமாகின்றது.**

# தராக்கி... சில நினைவுகள்!



## நடராஜா முரளிதரன்

மட்டக்களப்பு வாவியின் மேலோடி நிற்கும் புளியந்தீவுப் பாலத்தில் உறைந்தவாறு கிழக்கின் தென்றலை சுகித்து சுவாசித்து இன்பவசப்பட்ட மண்ணின் மைந்தன் அந்த மண்ணின் வளத்துக்காகவே புதைக்கப்பட்டான் போலும்.

உலகத்தின் திக்குகள் எல்லாம் அவன் பாதங்கள் பதிந்திருந்தாலும் அவன் தன் ஆழ்மனதின் அமைதி தேடி அந்த மட்டக்களப்பு மண்ணுக்கே ஓடிவந்து கொண்டிருந்தான்.

அந்த மண்ணிலே தமிழ் மக்களைத், தமிழ் மக்களே காயப்படுத்தும் வகையிலான நிகழ்வுகள் இரு வருடங்களுக்கு முன் ஆரம்பித்த கணங்களில் செங்குருதி சிந்தாத ஒருமைப்பாடு காண விரைவுகொண்டு விழைந்தவன் அவன்.

அவன்தான் தராக்கி என்று எம்மால் அழைக்கப்பட்ட தர்மரட்னம் சிவராம்.

பட்டப்படிப்பைத் துறந்து மானுடத்துக்காகப் போரிடப் புறப்படுதல் என்ற சேனையில் அணிவகுத்தவன், துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கும் அதிகாரத்தை பேனா முனையினால் கேள்விக்குரியதாக்கும் மறுபிறப்பை அடைந்தவன் ஆனான். அதனால் அவன் ஈடுபாடு காட்டிய இதழியல் ஊடான கருத்துச்செறிவுக் குவிப்பு ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் நியாயத் தேடற்தளத்தில் சர்வதேசக் கவனிப்பைப் பெற்ற ஒன்றாக மாறியது. அதற்கு அவனது இருமொழிப் புலமை மேலும் வீறூட்டியது.

1997 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டின் ஏரிகள் சூழ்ந்த அழகிய நகரங்களில் ஒன்றான லுசேர்ண் நகரில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி பத்து வருடங்கள் முடிவடைந்ததையொட்டி ஓர் கருத்துக் குழும மாநாட்டை இன்ரநாசனல் அலேர்ட் என்ற அரச சார்பற்ற நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. அச் சமயம் சந்திரிகாவின் அக்கா சுனீத்திராவின் முன்னாள் கணவர் குமார் ரூபசிங்கா இன்ரநாசனல் அலேர்ட் அமைப்பின் தலைமைத்துவப் பதவியை வகித்திருந்தார். ஏறத்தாழ முப்பது பேர் வரையில் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான புலமையாளர்கள், வல்லுனர்கள், ஒப்பந்த ஈடுபாட்டாளர்கள் என்ற வகையில் அம் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

இந்து பத்திரிகையின் ராம், இந்தியப் படைத் தளபதி கல்கத், றொஹான் குணரட்ணா, முன்னாள் வடகிழக்கு மாகாணசபை அமைச்சர் தயான் ஜயதிலகா, பிராட்மன் வீரக்கோன், ஜே. என்.டிக்ஸிற், அருட்தந்தை சந்திரகாந்தன் ஆகியோரெல்லாம் அந்த மாநாட்டிற்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். தராக்கி அவர்களும் இந்த மாநாட்டிலே உரையாற்றுவதற்காக சுவிஸ் வந்திருந்தார். மாநாடு மூன்று நாள்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன. மாநாடு முடிவுற்ற பின்னர் தராக்கி சூரிச்சில் உள்ள அவரது உறவினர் வீட்டில் தங்கியிருந்த வேளையில் நான் பணிபுரிந்த அலுவலகத்திற்கு தினந்தோறும் வருவார்.

அந்த வேளையிலேதான் எனக்கு அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அச் சந்தர்ப்பத்திலே ஓர் நாள் அவரைக் கேட்டேன். நீங்கள் ஐரோப்பிய நாடொன்றிலே நிரந்தரமாகத் தங்கியிருந்து ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பணிபுரியலாமே? – என அவரது பதில் நீரை விட்டுப் பிரிந்து மீன் உயிர் வாழுதல் சாத்தியமா? என்ற தோரணையில் அமைந்தது.

எங்களைப்போலைஆக்களுக்கு அங்கைதானே வேலை கிடக்கு என்று சிரித்தபடியே பதிலளித்தார். தொடர்ந்து மட்டக்களப்பில் காத்திரமான தமிழ் பத்திரிகையொன்றின் தேவை குறித்த அக்கறையோடு தான் இருக்கிறார் என்ச்வும் அது விடயமாக மேற்கொண்டு அலுவல்களைப் பார்க்க வேண்டியுள்ளது என்றும் கூறியது இன்றும் என் நினைவுகளில் பசுமையாக உள்ளது.

வெளிநாட்டு வாழ்க்கையில் அறவே விருப்புக் கொள்ளாத துறவுத்தனம் அவரை எனக்கு ஒரு சித் தராக உணர்த்தியது. ஒரு வகையில் சிவராமின் மரணத்தின் மூலம்தான், அவனை மீள் கண்டுபிடிப்புச் செய்தோம் என்று கூறுகிறார் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள்.

தராக்கி இல்லாத வெற்றிடத்தில், சர்வதேச தளத்தில் தமிழர் அல்லாதவர்களுக்கு தமிழ் பேசும் மக்களின் நியாயத் தேடல்களை எவ்வாறு புரிய வைப்பது அல்லது இன்றைய பிரகடனப்படுத்தப்படாத போர் உத்திகளின் மூல உபாயங்களை போரியல் பின்புலத்தில் எப்படி ஆய்வுக்குள்ளாக்குவது என்ற சிக்கல்கள் எழுந்து நிற்கின்றன.

அவை தொடர்பாக தராக்கி என்ற தனி மனிதன் சாதித்தவற்றை அவனது அரசியல் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களே சாட்சியங்களாக அமைந்து நிரூபித்து விடுகின்றன.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி வீரகேசரிப் பத்திரிகையில் பிரசுரமான அவர் எழுதிய கட்டுரையொன்றில்(கட்டுரையின் ஆங்கில வடிவமே என் கைக்கு எட்டியது) நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹைம் குறித்த விமர்சனம் ஒன்றின் சாரத்தை இங்கு சுட்டுதல் பொருத்தம் என்று எண்ணுகின்றேன்.

நோர்வே அரசின் சமாதான ஏற்பாட்டாளர் சொல்ஹைம் அவர்கள் இலங்கைக்கு வரும் போதெல்லாம் தமிழ் பத்திரிகையாளர்கள் மட்டத்தில் அதிசயம் நிகழ்வதற்கான எதிர்பார்ப்புடன் கூடிய பரபரப்பு எழுவது வழக்கம். விளைவு ஊடகங்கள் வழியாக புனைவு கட்டமைக்கப்பட்டு மக்கள் மனங்களையும் விளிம்பு நிலைக்கு இட்டுச் செல்லும்.

ஆனால், சொல்ஹைம் நோர்வே திரும்பியவுடன் எல்லா எதிர்பார்ப்புகளும் வெளுத்து மக்கள் வழமையான வாழ்வியல் நீரோட்டத்திலே கலந்து விடுவார்கள். சொல்ஹைம் அவர்களும் தனது வருகையின் பொழுது எப்போதும் போல நன்மைக்கான மாறுதல்கள் விரைவில் நிகழ்ந்து விடும் என்ற மந்திர உச்சாடனத்தை உரைப்பார்.

அவ்வாறான வகையில் மிக அண்மையில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு செவ்வி வழங்கிய சொல்ஹைம் அவர்கள் இன்னும் சில வாரங்களில் சுனாமி நிவாரணப் பணிகளுக்கான இரு தரப்பும் பிணைந்த இணைக்கட்டமைப்பு செயல்படுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் அவை எவையுமே இன்று நடைமுறைப் படுத்தப்படவில்லை. யாருக்காவது அது குறித்த சந்தேகம் இருப்பின் ஜே.வி.பியினர் அப்படியொரு கட்டமைப்பு நிறுவப்படும் பட்சத்தில் நாம் அரசிலிருந்து வெளியேறி விடுவோம் என்று அமெரிக்கப் பிரதிநிதியான கிறிஸ்டினா றொக்கா அம்மையாருக்கு அழுத்தம் திருத்தமாகக் கூறியதில் இருந்தே உண்மை நிலையினைப் புரிந்து கொள்ளலாம். சமாதானத் தூதுவர் என்பவர் நம்பிக்கை ஊட்டுபவராகவே காட்சியளிப்பார். ஆனால் அவரால் உருவகப்படுத்தப்படும் அக் காட்சிப் பிம்பத்தின் பொறிக்குள் விழுவதா, இல்லையா என்ற முடிவை எடுப்பது எம்மில்தான் தங்கியுள்ளது.

மேலே எனது உரைநடை வடிவத்துக்கு உட்படுத்தப்பட்ட அவரது கருத்துச் சாரம் யதார்த்தபூர்வமான மெய்மையாக வரலாற்றுத் தடத்திலிருந்து வெளிக் கிளம்புவதை உய்த்துணர முடியும்.

சில நாள்களின் பின் இறுதியாக ஜெனிவா நகரில் மனித உரிமைகள் மன்றின் முன்பாக சுவிஸ் வாழ் தமிழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலத்தின் முடிவில் தராக்கி அவர்கள் என்னோடு உரையாடியிருந்தார்.

அத் தருணத்தில், தமிழர் தரப்பில் விடுதலை என்ற கோசத்தோடு பல்வேறு அமைப்புக்கள் 80களின் முற் கூறுகளில் கிளர்ந்த போதும் அவை வீழ்ச்சிக்குள்ளான வரலாறு பற்றி இருவரும் விவாதித்துக் கொண்டோம். விவாதத்தின் இடையே தமிழீழக் கோரிக்கையை கைவிட்டதாலேயே அவ் அமைப்புக்கள் அழிந்தன என்றும் தமிழீழக் கோரிக்கையை கைவிடும் எந்த அமைப்பும் வரலாற்றின் இயங்கு தளத்திலிருந்து மறைந்து விடும் அல்லது அந்நியப்படுத்தப்படும் என்பதை தான் உணர்ந்துள்ளார் எனவும் தராக்கி என்னிடம் தெரிவித்திருந்தார்.

அக் கருத்தினை அன்று அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நான் உரையாற்றும் போது தராக்கி அவர்களின் பெயரைக் குறிப்பிடாது ஓர் பத்திரிகையாளரின் கருத்தாகச் சொல்லியிருந்தேன்.

உலக அழுத்தங்கள் கூர்மைப்படுத்தப்பட்டுப் பல்வேறு முனைகளில் இருந்து புறப்பட்டு எம்மைக் கடுமையாகத் தாக்குகிற இத் தருணங்களில் தேசிய இனப்பிரச்சினையின் வடிகாலாக சமஷ்டியின் மாதிரி வடிவங்களை ஏற்றுக் கொள்ளலாம்தானே (எதிரி எதையுமே வழங்கத் தயார் இல்லாத நிலையில்) என்ற உபதேசங்கள் செவிப் பறைகளில் முட்டி மோதுகின்ற போது தராக்கி மேலே கூறிய கருத்து சாத்தியமானதா என்பதை எதிர்கால வரலாற்றுப் பாடங்களில் இருந்து மட்டுமே நாம் கற்றுக் கொள்ளமுடியும்.

கற்றுத் தருவதற்கு இப்போது தராக்கி எம்மிடம் இல்லை. தராக்கி அவர்களது வாழ்வுச் சரிதத்தை அமெரிக்க பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மார்க் விற்றேக்கர் என்பவர் எழுதிக் கொண்டிருக்கிறார். அச் சரிதத்துக்கு அவரால் இடப்பட்ட பெயர் Learning Politics from Sivaram என்பதாகும்.

இப் பேராசிரியர் 1982 களில் மட்டக்களப்பிலே தங்கியிருந்து மட்டக்களப்பு தொடர்பான பண்பாடு, புதைபொருள் அகழ்வு ஆய்வுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளைகளிலேதான் முதன் முதலாக சிவராமைச் சந்தித்து நெருங்கிய நண்பராகிக் கொண்டார். இருவருமே தத்துவவியல் துறை சார்ந்த பொதுவான கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாக விளங்கியமையால் நட்பு மேலும் பலப்பட்டது.

பேராசிரியர் மார்க் விற்றேக்கர் அவர்கள் சிவராமின் பாதுகாப்புக் குறித்துக் கவலைப்பட ஆரம்பித்த வேளைகளிலேதான் சிவராமின் சிந்தனைகளையும், முயற்ச்சிகளையும் பதிவு செய்து கொள்வது தனது கடமைகளில் ஒன்று என எண்ணுகின்றார். அதற்கான வேலைத் திட்டங்களை சிவராமின் மன ஒப்புதலுடனும், ஒத்துழைப்புடனும் 1997களிலேயே ஆரம்பித்தார்.

சிவராமின் உயிருக்குக் குறி வைக்கப்படும் அபாயம் நெருங்கி வந்த வேளையில் அவனுக்கு வேண்டியவர்கள் அது குறித்த அச்சம் கொண்டவர்களாக அவனை நாட்டை விட்டு இடம் பெயர்க்க முயற்சித்த போதெல்லாம் அதற்கு அடங்காதவனாக, அச்சப்படாதவனாக, வெகு சாவகாசமாக அவன் உலா வந்தான்.

அவன் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை. தமிழ் மக்களின் அரசியல் தூதுவனாக உலகத் தலைநகர்கள் எங்கனும் இராஜதந்திரிகளை, புத்திஜீவிகளை அறிவியல் தளத்தில், போரியல் பின்புலத்தில் எதிர்கொண்ட சிவராம் துல்லியமாகவும், நுணுக்கமாகவும் சர்வதேச அரசியல் தாக்கங்களை கணிப்பவனாக இருந்தமையினால் அவனது இழப்பு ஈடு செய்ய முடியாத சமன்பாடாகிறது.




# யாழ். பல்கலை ஆசிரியர், ஊழியர் சங்கங்கள் இணைந்து போராட்டம்!

யாழ்ப்பாண பல்கலைகழக ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம் என்பன நேற்று வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவி விலகக் கோரி நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். மேற்படி போராட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம் என்பன யாழ்.பல்கலைக்கழக முன்றிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# நெருக்கடிகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு சில கட்டுப்பாடுகளுக்கு அடிபணிய வேண்டும்

## தயாசிறி ஜயசேகர கோரிக்கை



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் சில கட்டுப்பாடுகளுக்கு அடிபணிய வேண்டியிருக்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

பிரதமர் பதவி நீக்கம் இரண்டு வழிகளில் இடம்பெறலாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சர்வ கட்சி ஆட்சி அமைக்கும் நடவடிக்கை தொடர்பாக மட்டுமே பேசி வருகிறோம். பிரதமர் பதவி விலகுவாரா? பிரதமரை ஜனாதிபதி நீக்குவாரா? என்பது எதிர்காலத்தில் முடிவு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வ கட்சி ஆட்சி என்பது ஒன்று அல்லது இரண்டு கட்சியால் மட்டும் செய்யக்கூடிய ஒன்றல்ல. எனவே, இந்த வாய்ப்பைத் தவறவிட வேண்டாம் என நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

# நடிகை அனுஷா சோனாலி 47 ஆவது வயதில் மரணம்!



இலங்கை நடிகை அனுஷா சோனாலி 47 ஆவது வயதில் காலமானார்.

கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திடீரென ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக அனுஷா சோனாலி உயிரிழந் தார் என வைத்தியசாலை வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அவர் உயிரிழப்பதற்கு முன்பு சில காலமாக நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அனுஷா சோனாலி 1995 ஆம் ஆண்டு சரசவி திரைப்பட விழாவில் சிறந்த வளர்ந்து வரும் நடிகைக்கான விருதைப் பெற்றுள்ளார்.

அனுஷாசோனாலிவிசிடீலா உட்பட பல பிரபலமான படங்களில் நடித்து தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருந்துப் பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகள் தொடர்ச்சியாக பேணப்படும்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

மருந்து பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகளை தளர்த்துமாறு கோரி மருந்து தயாரிப்பாளர் சங்கம் மற்றும் மருந்தக உரிமையாளர் சங்கம் விடுத்த கோரிக்கையை சுகாதார அமைச்சு நிராகரித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையில் தற்போது மருந்து பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகளைத் தளர்த்துவதால் நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்றும் சுகாதார அமைச்சர் சன்னஜயசுமன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மற்றும் விலை கட்டுப்பாட்டு சபை இணைந்து இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைக்கு அமைவாக நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமை நிலவுகின்ற நேரத்தில் விலைக் கட்டுப்பாட்டை நீக்குவது பொருத்தமாகாது.

மாறாக டொலரின் விலை ஏற்ற இறக்கத்தின் அடிப்படையில் மருந்துகளுக்கு அதிகபட்ச விலை நிர்ணயிப்பது சாத்தியப்படும்.

தனியார் சந்தையில் மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் விலைக் கட்டுப்பாட்டு குழு அமைச்சரிடம் பலயோசனைகளைகையளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

புத்தளம் பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத் துப்பாக்கியொன்றுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். புத்தளம் – கல்லடி பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரால் குறித்தநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# கைப்பற்றப்பட்ட ஹெரோயின் மீளவிற்பனை: பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றின் வழக்குப் பொருள்கள் காப்பகத்தில், வழக்குப் பொருளாக இருந்த ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்தி விற்பனை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், கைது செய்யப் பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் மே 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பு மேலதிக நீதிவான் பி.என்.எல். மஹவத்த இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

கொத்தட்டுவை பொலிஸ் நிலையத்தின் வழக்கு நெறிப்படுத்தல் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிளாக செயற்பட்ட ரொமேஷ் கிம்ஹான் எனும் சந்தேக நபரையே இவ்வாறு விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந் நிலையில், இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றுக்கு மேலதிக விசாரணை அறிக்கையை சமர்ப்பித்த பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள், இவ்வழக்கின் 2 ஆவது சந்தேக நபராக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றின் வழக்குப் பொருள் காப்பகத்தின் பொறுப்பாளராக செயற்பட்ட கங்கானம்கே கெமுனு சம்பத் என்பவரை பெயரிடுவதாக அறிவித்தனர்.

அதன்படி அவரைத் தேடி தொடர் விசாரணைகள் இடம்பெறும் நிலையில், அவர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு விசாரணையாளர்கள் கோரினர். அதற்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்றை முன்னெடுக்க குழுவொன்றை நியமிக்குமாறும், வழக்குடன் தொடர்புபட்ட ஹெரோயின் எந்த வழக்கு தொடர்பில் வழக்குப் பொருளாக கைப்பற்றப்பட்டது, அது எந்த அதிகாரியின் பொறுப்பின் கீழ் இருந்தது என்பது தொடர்பில் அறிக்கையளிக்க கொழும்பு 2 ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றின் பதிவாளருக்கு உத்தரவிடுமாறும் பொலிஸார் கோரினர்.

## பிரதி சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்மொழி யப்பட்டால் ஏகமனதாகத் தெரிவு இடம் பெறும். இருவர் போட்டியிட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன்படி ஆளுங்கட்சியின் சார்பில் டிலான் பெரேராவும், 11 கட்சிகளின் சார்பில் அநுர பிரிய தர்ஷன யாப்பாவும் பிரதி சபாநாயகர் பதவிக்குப் போட்டியிடக்கூடும். மறுபுறத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் உறுப்பினர் ஒருவரை நிறுத்தக்கூடும்.

## ஈ.பி.டி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுத்து எதிர்க் கட்சிகளான த.தே.கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன கறுப்பு பட்டி அணிந்து போராட்டம் நடத்தியதோடு சபையில் பிரேரணையாகவும் முன்மொழிந்தன.

இதன்போது ஈ.பி.டி.பியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மட்டும் கறுப்புக்கொடியை அணிந்து பிரேரணைக்கு ஆதரவளித்தனர்.

இதன் அடிப்படையில் எதிர்க் கட்சிகள் கொண்டு வந்த பிரேரணை நிறைவேறியது.

இதேநேரம் 20 உறுப்பினர்களைக்கொண்ட வேலணை பிரதேச சபையில் கூட்டமைப்பு சார்பில் 8 உறுப்பினர்களும், ஐ.தே.க, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுதந்திரக் கட்சி. ஆகியவற்றின் தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் ஆதரவாக இருந்து பிரேரணையை நிறைவேற்றினர். இந்தப் பிரேரணையைக் கூட்டமைப்பின் அ.சிறிபத்மராசா முன்மொழிய ஐ.தே.கட்சியின் சு.பிரகலாதன் வழிந்தார்.

இதேநேரம் ஈ.பி.டி.பியின் ஜனார்த்தன், மகிந்தன் ஆகிய இரு உறுப்பினர்களே கறுப்புக்கொடியை அணிந்திருந்தனர்.

## தமக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று தமது மொட்டுக் கட்சியின் எம்பிக்கள கூட்டத்தில் உரையாற்றிய அவர் தமக்கு சகோதர பாசம்தான் மிக முக்கியம் என்று கூறியிருக்கிறார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு தாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் கோரவேயில்லை என்றும் ஜனாதிபதி வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. பெரும்பாலான எம்.பிக்களின் கருத்து நிலைப்பாடு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இருந்தது. இடைக்கால அரசு என்றபேரில் பிறிதொருதரப்புக்கு அதிகாரத்தை கையளிப்பதற்கு எதிராக பல எம்.பிக்களும் உரையாற்றினார். இடைக்கால அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட டலஸ் அழகப்பெருமவுக்கு எதிராக பல எம்.பிக்கள் சத்தமிட்டு உரையாற்றி தங்கள் சீற்றத்தை வெளிப்படுத்தினர். எனினும் டலஸ் அழகப்பெருமவைக் காப்பாற்றும் விதத்தில் பிரதமர் உரையாற்றினார்.

இதனை அடுத்து இறுதியாக உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு எந்த கட்டத்திலும் தான் கோரவே இல்லை என்றார்.

ஆனால் 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு – அதாவது சாதாரண பெரும்பான்மை எம்பிக்களின் ஆதரவு – அரசுக்கு இருக்கும் வரை எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார் ஜனாதிபதி.

"ஆனால் வேறு ஒரு தரப்பு 113 எம்.பிக்களின் ஆதரவைக் காட்டி ஆட்சியைத் தருமாறு கோரினால் அதை செவிமடுக்க வேண்டியிருக்கும். அதை வழங்க வேண்டியிருக்கும். ஆனால் இந்த பிரச்சினைகள் எல்லாவற்றையும் விட சகோதர பாசம்தான் எனக்கு முக்கியம். நான் எந்தக் கட்டத்திலும் பிரதமரைப் பதவி விலகுமாறு கோரவே இல்லை" – என்றார் ஜனாதிபதி.

இடைக்கால அரசை அமைக்கும் தமது உத்தேச திட்டத்திலிருந்து ஜனாதிபதி பின்வாங்கி விட்டார் என்பதையே அவரது நேற்றைய உரை எடுத்து காட்டுவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ "தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் எனக்கு சாதாரண பெரும்பான்மை உண்டு. அதில் எவருக்கும் சந்தேகம் ஏற்பட தேவை இல்லை. அதில் உறுதியாக இருக்கிறேன்" – என்றார்.

அதிருப்திக் குழுக்களின் தலைவர்களை இன்று ஜனாதிபதி சந்திக்கிறார். அச்சமயத்தில் தற்போதைய அரசை பதவியில் இருந்து அகற்றி சர்வகட்சிகளின் இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவதாயின், அதற்கு முதலில் தற்போதைய அரசுக்கு எதிரான 113 எம்.பிக்களின் ஆதரவை நாடாளுமன்ற அவையில் வெளிப்படுத்திக் காட்டுங்கள் என்று ஜனாதிபதி கோருவார் எனத் தெரிகிறது. அப்படி கோருவதன் மூலம் இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும் நெருக்கடிக் கட்டாயத்தில் இருந்து தற்காலிகமாகத் தம்மை காத்துக் கொள்ள ஜனாதிபதி முயல்வார் என்றும் தெரிய வருகிறது

# அண்ணன் என்னடா,....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவும் இந்த விடயத்தில் தெளிவாகப் பேசுகிறார் இல்லை. அரசை எதிர்த்து நம்பிக்கை இல்லாப் பிரேரணை என்றால், அது இருவரில் யாரை எதிர்த்து என்று அவரது தரப்பினர் தெளிவுபடுத்த விரும்புவதில்லை. மஹிந்தவின் பிரதமர் பதவியை பறிக்க நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 225 உறுப்பினர்களில் 113 பேரின் ஆதரவு போதும். ஆனால், ஜனாதிபதிக்கு எதிராக மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேலான 151 வாக்குகள் தேவை.

தற்போதைய நிலைமையில், அனைத்து எதிர் தரப்பினரையும் சேர்த்து, 113 க்கே இன்னமும் வழியில்லை. எனவே, 151 ற்கு ஆசைபடுவதில் பயனில்லை. அதனால் தான், 113ஐப் பிடித்து, பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதிலேயே எதிரணியினர் துடிப்பாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் 151 ஐ எட்டுவார்களேயானால், அதனுள் 113ஆம் அடங்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

அரசியல் ரீதியாக, சஜித் தலைமை வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, மாற்று ஆட்சி அமைப்பதில் ஆர்வம் இல்லை என்றும், பொதுத் தேர்தல் மூலமே ஆட்சியைப் பிடிப்போம் என்றும் கூறி வருகிறது. காரணம், சுமார் 50 க்கும் அதிகமான உறுப்பினர்களே உள்ள கட்சி, குதிரைப் பேரம் மூலம் கூட்டாட்சி அமைத்தால், அந்தக் குதிரை குப்புற தள்ளுவதோடு நில்லாமல், குழியையும் பறிக்கும் என்ற உள்ளுணர்வுதான்.

இது போதாது என்று வீரவன்ஸ வகையாறாக்களுடன் கொள்கை ரீதியான பிரச்சினைகள் துவக்கம் முதல், ஒவ்வொரு கொள்கை நிமித்தமும் தொடரும். கடந்த 2018 இல் ரணில் ஆட்சியைக் கவிழ்த்த அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை எதிர்த்து துடிப்பாக முன்னால் நின்ற சஜித், இன்று அவருடன் கை கோர்த்தால் அவரது முந்தைய போராட்டம் அர்த்தமில்லாமல் போய்விடும். இதற்கு அப்பால், தற்போது, கோட்டாவின் பக்கம் நிற்கும் மொட்டு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆட்சி அமைத்தால், கேட்கவே வேண்டாம். அவரை மக்கள் பதவி ஆசை பிடித்தவர் என்று முத்திரை குத்தி விடுவார்கள்.

### கதை கந்தல்

தற்போதைய சூழலில், புதிதாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தினால், அறுதிப் பெரும்பான்மை பெற முடியும் என்ற நம்பிக்கையான சூழல் நிலவுகிறது. அதற்கும் அப்பால் சென்று, சஜித் தரப்பு, மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டால், அப்போது கோட்டவை ஜனாதிபதவியில் இருந்து தூக்கலாம். ஆனால், அவரோ, ராஜதந்திர ரீதியாக யோசிக்காமல், எடுத்தோம், கவிழ்த்தோம் என்று, 'அடைந்தால் மகாதேவி' பாணியில் வீர வசனம் பேசுகிறார்.

அரசியல் சட்ட ரீதியாக, ஜனாதிபதியைப் பதவியில் இருந்து விலக்குவதை தவிர வேறு வழி ஏதும் இல்லை. மாறாக, மக்கள் போராட்டம் மூலமும், சர்வதேச அழுத்தத்தின் மூலமும் தன்னால் அண்ணன் – தம்பி இருவரையுமே இப்போதே வீட்டிற்கு அனுப்ப முடியும் என்று யாராவது நினைத்தால், அந்த கதை கந்தலாகவும் வாய்ப்பு உள்ளது. தற்போது, கோட்டாவிற்கு எதிரான அதிகாரப் போட்டியில், மக்கள் தன் பக்கம் இருக்கிறார்கள் என்று மஹிந்த கூறுவதில் உண்மை இல்லை என்றாலும், அவரது அந்த கூற்றினை யாரும் முழுமையாக புறம் தள்ளி விட கூடாது.

அதே தோரணையில், மஹிந்தா, காலி முகத்திடல் போராட்டம், (கொழும்பு) நகர்புற நடுத்தர வர்க்கத்தினரின் முன்னெடுப்பே என்று கூறுவதையும் ஆராய வேண்டும். அதற்காக, தென்னிலங்கை கிராமப்புற மக்கள் அவருக்கு வாக்களிக்கப் போகிறார்கள் என்றல்ல பொருள். மாறாக, தேர்தல் என்று வந்து விட்டால், அதன் கூடுதல் – குறைவுகள் எந்த வழியிலும் பயணிக்கலாம்.

### சபாஷ், சரியான போட்டி

இந்த சூழ்நிலையில், இன்று (வெள்ளி கிழமை), ஜனாதிபதி கோட்டபாய கூட்டியுள்ள ஆளும் கூட்டணி நாடாளுமன்ற கூட்டம், அண்ணன் – தம்பி யுத்தத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் என்று எதிர்பார்க்கலாம். எப்போது, தம்பிக்கு எதிராக அண்ணன், தனது கட்சியின் நாடாளுமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் கூட்டத்தை கூட்டி, தனது பலத்தை நிரூபித்தாரோ, அப்போதே கோட்டாவும் இது போன்ற குயுக்தி தனமான முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டியது அவசியமாகி விட்டது.

ஒருவர், ஒரு துணியின் இழையில் நுழைந்து வெளியே வந்தால், மற்றவர், கோலத்தின் இழைகளின் இடையேயே புகுந்து வரப் பார்க்கிறார். மற்றவொரு தருணத்தில், 'சபாஷ், சரியான போட்டி' என்று அவர்களது அரசியல் சாதுர்யத்தை மெச்சத் தோன்றும். ஆனால், தற்போதைய நாட்டின் பொருளாதார சூழலில், அவர்களது குடுமிப் பிடிச் சண்டை கேவலமாகப் படுகிறது.

ஏன் என்று தெரியவில்லை, ஆனால், வீரவன்ஸ – கம்மன்பில வகையாறா, கடந்த 2020 நாடாளுமன்றத் தேர்தல் துவக்கம், மஹிந்தவிற்கு எதிராகச் செயலாற்ற துவங்கி விட்டனர். அதன் ஒரு பகுதியாக, வீரவன்ஸ, மொட்டு கட்சியின் தலைமைப் பதவியை, மஹிந்தா கோட்டவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூட அறிக்கை விட்டார். அப்போது, தான் அந்த கட்சியின் உறுப்பினர் அல்ல என்பதையும், தானே, ஆளும் கூட்டணியில் மற்றொரு கட்சிக்குத் தலைமை வகிக்கிறார் என்பதையும் கூட அவர் மறந்து விட்டார்.

அந்த வகையில், இன்றைய கூட்டத்தில் மைத்திரி தலைமையிலான சுதந்திர கட்சி பங்கெடுக்க போகிறதா, அவ்வாறென்றால், அவர்களது நிலைமை என்னவாக இருக்கும் என்பவையும் முக்கிய பேசுபொருளாக இருக்கின்றனர். அது போன்றே, மொட்டு கட்சியின் அவைத்தலைவராக இருக்கும், வெளியுறவு துறை அமைச்சர் ஜீ.எல்.பிரிஸின் நிலைமையும் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய விடயம். அது எதிர்கால, பிரிவினை யுத்தங்களில் முக்கியமான விடயமாகவும் இருக்கும்!

# வித்தியாசமாய்..

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் கல்வியின் சிந்தனையினைப் பாரதிதாசன் வித்தியாசமாய் வெளிப்படுத்துகிறார். சிறுவர்க்குக் கல்வி, ஆடவர்க்குக் கல்வி, முதியோர்க்குக் கல்வி, உடல் ஊனமுற்றவர்க்குக் கல்வி என்று பாரதிதாசனின் புதிய சிந்தனைகள் எழுந்து நிற்கின்றன.

பொதுவுடமை பற்றிய வகையிலும் பாரதிதாசன் வித்தியாசமாய் சிந்திக்கிறார்.

**சித்திரச் சோலைகளே – உமை நன்கு**
**திருத்தஇப் பாரினிலே – முன்னர்**
**எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனர்**
**ஓஉங்கள் வேரினிலே**

**நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு**
**நெல்விளை நன்னிலமே – உனக்கு**
**எத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை**
**இறைத்தனர் காண் கிலமே**

**தாமரை பூத்த தடாகங் களே உமைத்**
**தந்த அக் காலத்திலே – எங்கள்**
**தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்**
**சொல்லலோ ஞாலத்திலே**

சோலைகளைப் பார்க்கிறார். வயல்களைப் பார்க்கிறார். தாமரைத் தடாகங்களைப் பார்க்கிறார். அந்தப் பார்வையையினூடாக அதற்காக உழைத்துப் பாடுபட்ட உழைப்பாளிகளை அவர் மனம் எண்ணுகிறது. இப்படி எண்ணும் எண்ணமேதான் பாரதிதாசனின் புதிய சிந்தனையாக, வித்தியாசமான சிந்தனையாக இங்கே வந்து நிற்கிறது அல்லவா !

**ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்**
**உடையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ**

சமத்துவத்தை இப்படியாய் சிந்திந்து வித்தியாசமாய் பாரதிதாசனால்த்தான் பார்த்திட முடியும்.

**மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற**
**காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே**

**வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்**
**தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி**

என்று சமூக சிந்தினையினை சீர்திருத்த நோக்கில் பார்த்து வித்தியாசமான சிந்தனையாக தாலாட்டுப் பாடியவர் என்ற வகையில் பாரதிதாசனை வியந்து பாராட்டியே ஆகவேண்டும்.

கவித்துவம் மிக்கவர் பாரதிதாசன். கவிதை எழுதினார். நாடகம் எழுதினார். கட்டுரைகள் எழுதினார். நூல்கள் பல எழுதினார். திரையிலும் ஜொலித்து நின்றார். எங்கு சென்றாலும் பாரதிதாசன் என்னும் முத்திரையினைப் பதித்தே நின்றார். மகாகவி பாரதியார் தமிழனினத்துக்கு விட் டுப்போன மகத்தான மூன்று சொத்துக்களானவை 'குயில்பாட்டு, கண்ணன் பாட்டு,பாரதிதாசன்' என்று எழுத்துலக ஜாம்பவான் கல்கி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு பாரதி தாசன் பார்க்கப்படுவதற்கு முக்கியமான காரணம் எது தெரியுமா? அவரிடம் காணப்பட்ட வித்தியாசமான சிந்தனைகளே.

காலைக்கதிர்
Kalaikkathir

# கொழும்பு அரசியலில் என்ன நடக்கிறது?

- ஆர்.சிவராஜா -
(ஆசிரியர் - 'தமிழன்' பத்திரிகை)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து நீக்க ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை எடுப்பார் என்ற செய்தி அரசியல் வட்டாரங்களில் பரவலாக சென்றாலும் நேற்று அந்த நிலைமை மாறியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.



'ஜனாதிபதி கோட்டாபய தன்னை பதவியில் இருந்து நீக்கமாட்டார். அவர் அப்படிச் செய்வார் என்று நான் நினைக்கவில்லை' என்று பிரதமர் மஹிந்த நேற்று தெரிவித்த கருத்து ஜனாதிபதி கோட்டாபயவை உருகச் செய்திருக்கிறது.

அதேசமயம் முக்கியமான பிரமுகர்கள் இருவர் நேற்று ஜனாதிபதியையும், பிரதமரையும் சமரசப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். அவர்களில் ஒருவர் வெளிநாட்டு இராஜதந்திரி. "மஹிந்தவை வெளியில் விட்டால் உங்கள் கழுத்துக்கு கத்தி வந்துவிடும். இடைக்கால அரசு வந்தாலும் அதற்கு ஆதரவளிக்க சஜித், அனுர குமார ஆகியோர் தயாரில்லை. அப்படிப் பார்த்தால் மீண்டும் பொதுஜன பெரமுனதான் இடைக்கால அரசிலும் இருக்கும். அதற்கு மஹிந்தவே பதவியில் நீடிக்கலாமே" என்ற ஆலோசனை ஜனாதிபதிக்கு சொல்லப்பட்டுள்ளது.



அதனை நன்கு செவிமடுத்த ஜனாதிபதி முன்வைத்த காலை பின்வைத்திருக்கிறார்.

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் நடந்த ஆளுங்கட்சி நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி இப்படி கூறியிருக்கிறார்:

''இப்போது அலரிமாளிகை, ஜனாதிபதி மாளிகை அணிகள் என பிரித்து பேசப்படுகிறது. அப்படி ஆளுக்காள் பிரிந்து வேலை செய்யாதீர்கள். நான் பிரதமரை பதவி நீக்கம் செய்யவில்லை. செய்யவும் மாட்டேன். அப்படி செய்ய வேண்டிய தேவை இதுவரை எழவில்லை. எங்களுக்குள் குழப்பத்தை உண்டு பண்ண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன." – என்று கூறியிருக்கிறார்.

அத்துடன் கூட்டத்தில் இருந்த ஜனாதிபதியும் பிரதமரும் அந்நியோன்னியமாக, இருந்தார்களென சொல்லப்பட்டது.

அதேசமயம் இங்கு இன்னொரு சுவாரஸ்யமும் நடந்திருக்கிறது.

'தற்போதைய நிலைவரம் குறித்து முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும பேச முயன்றபோது பின்வரிசை எம்.பிக்கள் அதற்கு இடையூறு ஏற்படுத்த முயன்றனர். அரசுக்குள் இருந்து கொண்டே சதி வேலைகளில் சிலர் ஈடுபடுகின்றனர் என்று அந்த எம்.பிக்கள் குரல் எழுப்பியுள்ளனர்.ஆனால் அந்த வேளை குறுக்கிட்ட பிரதமர் மஹிந்த, டலஸ் பேசும்போது இடையூறு விளைவிக்க வேண்டாமென கேட்டுக்கொண்டுள்ளார்.

'டலஸுக்கும் எனக்கும் உள்ள உறவு நீண்டகால நட்பு. அவரை எனக்கு நன்றாக தெரியும். நட்புக்கு அப்பால் அவர் எதையும் செய்ததில்லை. அவ்வளவு உற்ற நண்பன் அவர்" என்று பிரதமர் கூற எம்.பிக்கள் அப்படியே அடங்கிவிட்டனர்.

இந்த நிலைவரத்தை பார்க்கும்போது இன்றைய தினத்தில் கொழும்பு அரசியல் நிலைமை மாறியிருக்கிறது. ஜனாதிபதி தனது கடும்போக்கில் இருந்து இறங்கியிருக்கிறார். மறுபுறம் பிரதமரும் இடைக்கால அரசுக்கு தயாராக இருப்பவர்களை அரவணைக்கத் தொடங்கியுள்ளார்.

ஆளுங்கட்சியின் சுயாதீன எம்.பிக்கள், கட்சித் தலைவர்களை நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்தித்து பேசவிருந்த நிலையில் ஜனாதிபதியின் மனதில் இந்த மாற்றம் நடந்திருக்கிறது. இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமாயின் இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், சாந்த பண்டார ஆகியோரை பதவியில் இருந்து அகற்ற வேண்டுமென சுதந்திரக் கட்சி நேற்றுக்காலை கூறியிருந்தது. ஆனால் அந்த முடிவை மாற்றி இதர 11கட்சிகளுடன் சேர்ந்து இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள சுதந்திரக்கட்சி நேற்று மாலை தீர்மானித்துள்ளது.

ஆனால் இந்த நிலைமையின் கீழ் நாளை அந்தக் கூட்டம் நடைபெறுமா அல்லது இன்னொரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. நாளை இந்தக் கூட்டம் சில வேளை ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்படுமாக இருந்தால் இடைக்கால அரச ஏற்பாடென்பது புஸ்வாணமாகி விடும்.

**ஜனாதிபதி பின்வாங்கியமை ஏன் ?**

பிரதமர் பதவி நீக்க விவகாரத்தால் மொட்டுக்கட்சி இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி உடைந்தால் அது இப்போதுள்ள நிலையில் தனது பதவிக்கு ஆபத்தாகிவிடும் என்று ஜனாதிபதி நினைத்திருப்பாரா ?

அல்லது பிரதமர் பதவியில் இருந்து மஹிந்தவை நீக்கினால், பொதுஜன பெரமுன எம்.பிக்களின் ஆதரவுடன் தனது கதிரைக்கு ஆபத்தான வகையில் குற்றவியல் பிரேரணையை மஹிந்தவே முன்னின்று கொண்டுவந்துவிடுவார் என்று ஜனாதிபதி நினைத்திருப்பாரா ?

அல்லது இடைக்கால அரசு அமைக்கும் அணியின் பலம் குன்றி இருப்பதால் அல்லது அவர்களுக்கு போதிய எம்.பிக்கள் இல்லை என்று உணர்ந்து மஹிந்தவே தொடர்வது நல்லதென விரும்புகிறாரா? தெரியவில்லை.

ஆனால்இப்போதுள்ளநிலைமையில் நாட்டின் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் நீடிப்பதால் இன்றைய கூட்டத்தை சமாளிக்கவே ஜனாதிபதி அப்படி கூறினார். அவர் அடுத்த சில தினங்களில் அதிரடி முடிவுகளை எடுப்பாரென ஆளுங்கட்சியில் சுயாதீன எம்.பி ஒருவர் சற்று முன்னர் தெரிவித்தார். இடைக்கால அரசு அமைப்பதாக மாநாயக்க தேரருக்கு உறுதியளித்துள்ளதால் அவர் அதனைசெய்தே தீருவார் என்று கூறுகிறார் அந்த எம்.பி.



ஆனால் கடந்த காலங்களில் அரசாங்கம் அடித்த வர்த்தமானிகள் போன வேகத்தில் திரும்பி வந்தனவே. அரசாங்கத்தின் பல முடிவுகள் நிலையாக இருந்ததில்லையே. அப்படி இருக்கையில் ஜனாதிபதியின் அதிரடித் தீர்மானத்தை நம்புவது எவ்வாறு என்று நான் அந்த எம்.பியிடம் கேட்டேன்.

அவரிடமிருந்து பதில் இல்லை.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தேவையான ஒப்பங்கள் எதிர்க்கட்சியிடம் இல்லை. அதனால் அவர்களை நம்பி தன்னை ஜனாதிபதி கதிரையில் அமர்த்திய அண்ணனை பகைப்பதா என்றே ஜனாதிபதி இன்று, இந்த நிமிடத்தில் சிந்திப்பதாகவே எனக்குப் படுகிறது.

ஆனால் என்னதான் நடந்தாலும், இழந்த ஆதரவை மக்களிடமிருந்து மீளப் பெறுவது ராஜபக்ஷக்களுக்கு இலகுவாகி விடாது. ரஜினி மொழியில் சொன்னால் 'கதம் கதம்...'

